விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 01 திங்கட்கிழமை (17.08.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 241





# துணை மேயர் பதவியை தமக்கு வழங்க அ.இ.முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை!

## அமைச்சர் டக்ளஸிடம் பேசவும் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் துணை மேயர் பதவியை தமக்கு வழங்க வேண்டும் என ஆளும் கட்சிக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது. இது குறித்து சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சு நடத்தவுள்ளதாக அமைச்சர் அமீர் அலி தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

வெள்ளத்தில் முகாம்... (மேலும் சில படங்கள் 13ஆம் பக்கத்தில்...)



## விபத்தில் படுகாயமடைந்த சகோதரர்கள் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மினிவான் - மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் காயமடைந்த சகோதரர்கள் இருவரும் நேற்று சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நீர்வேலி தெற்கைச் சேர்ந்தவர்களான நவரட்ணம் சிவபுனிதம் (வயது -47) அவரது சகோதரன் இராமநாதன் செல்வமூர்த்தி (வயது்-27) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவரும் (14ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் மீள்குடியமர்வுக்கு அமெரிக்க அரசு வலியுறுத்தல்!

(வாஷிங்டன்)

வன்னி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை மீள்குடியமர்த்துவது அத்தியா வசியமானது என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் அனைத்துலக உறவுகளுக்கான துணைக் குழுத் தலைவர் றொபோர்ட் காசேயை நியூயோர்க்கில் உள்ள இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவை கடந்த வாரம் சந் தித்து பேசியபோது இந்த அழுத்தம் வழங்கப் பட்டது.

காசே தலைமையிலான பிரதிநிதிகள் சபையின் துணைக் குழுவே தெற்கு, மத்திய ஆசிய மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளின் அனைத்துலக விவகாரங்களை கவனித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தமிழக மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நடைபெற்ற போர் முடிபுக்கு வந்துவிட்டதாக இலங்கை அரசு அறிவித்து இரண்டுமாதங்களுக்கு மேலாகியுள்ள நிலையில் இந்திய-இலங்கை கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரின் பிரசன்னம் அதிகரித்துள்ளதாகவும், தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருவதாகவும் தமிழ் நாடு (14ஆம் பக்கம் பார்க்க)

## தொடரும் மழையால் அவலம்; முகாமிலுள்ள மக்கள் குமுறல்!

### நடவடிக்கையின்றி அதிகாரிகள் அசமந்தம்

(வவுனியா)

தொடரும் மழை காரணமாக வவுனியா மெனிக்பாம் முகாம்களில் உள்ள மக்கள் பெரும் அவலங்களை எதிர் கொண்டுள்ள போதிலும் நிலைமைகளைச் சீராக்குவதற்கு அரசோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ இதுவரையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என தமிழ் அரசியல் வட்டாரங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

இதனால் முகாம்களில் உள்ள சுமார் மூன்று லட்சம் மக்களும் பெரும் அவலத்தை எதிர்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

குறிப்பாக தாழ்வான பகுதிகளில் உள்ள முகாம்களில் உள்ளவர்கள் பெரும் ஆபத்தான நிலையை எதிர் கொண்டிருக்கின்றனர்.

இவை (02ஆம் பக்கம் பார்க்க)


## அணு ஆயுதங்களை பயன்படுத்த புலிகள் திட்டமிட்டிருந்தனர்!

### பத்மநாதனிடமிருந்து தகவல் கசிவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அணுவாயுதங்களையும் பயன்படுத்த திட்டமிட்டிருந்ததாக பிரபல சிங்கள வார ஏடொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அணுவாயுதங்கள் மற்றும் அணு சக்தியைப் பெற்றுக் கொள்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச தீவிரவாதிகளின் உதவியைக் (02ஆம் பக்கம் பார்க்க)


## நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் ஜனவரியில் ஜனாதிபதி தேர்தல்



### ஜனாதிபதி மகிந்த உறுதி

(கொழும்பு)

அடுத்த வருட தொடக்கத்தில் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக ஜனாதிபதி தேர்தல்களை நடத்துவதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியாக இருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (02ஆம் பக்கம் பார்க்க)



## எச்சந்தர்ப்பத்திலும் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்காது!

### சுரேஷ் எம்.பி. திட்டவட்டம்

(கொழும்பு)

எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்காது. மூன்று விடயங்களை நிபந்தனையாக வைத்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு தெரிக்கும் என வெளியான செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை பருவ மழைக்கு முன்னர் மீள் குடியேற்றல், வடக்கு கிழக்கிலிருந்து இராணுவத்தை மீளப்பெறல் (14ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

பிரபல ஆசிரியர் தயாரித்த 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்.

நாளை

✷ தமிழக ஜோதிடர் கலாமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் ஆவணி மாத ராசி பலன்கள்.

# மலேசிய சிறப்பு புடைப்பிரிவே பத்மநாதனை கைது செய்தது!

## லக்பிமவில் தெரிவிப்பு

(கொழும்பு)

மலேசியாவின் புலனாய்வு அமைப்பின் சிறப்பு படைப்பிரிவே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலரும், அனைத்துலக உறவு விவகாரங்களுக்கான இயக்குநருமான செல்வராசா பத்மநாதனை கைது செய்து தாய்லாந்து கொண்டு சென்று இலங்கை அதிகாரிகளிடம் கையளித்துள்ளது என கொழும்பு ஊடகமான லக்பிம ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலரும், அனைத்துலக உறவு விவகாரங்களுக்கான இயக்குநருமான செல்வராசா பத்மநாதன், மலேசியாவின் தலைநகரம் கோலாலம்பூரில் உள்ள 316 ஆவது இலக்கம் ஜலன் தொன்கு அப்துல் ரஃகுமான் வீதியில் உள்ள நட்சத்திர விடுதியில் வைத்து கைது செய்யப்பட்டது தற்போதும் உயர் இரகசிய மாகவே உள்ளது.

ஆனால் மலேசியாவின் புலனாய்வு அமைப்பான மலேசியன் சிறப்பு பிரிவு (MSB) எனப்படும் அமைப்பே பத்மநாதனை கைது செய்துள்ளது. எனினும் அவர்கள் அதனை வெளியில் தெரிவிக்காது மிகவும் இரகசியமாகப் பேணி வருகின்றனர்.

இதில் மலேசிய அரசின் பங்களிப்பை வெளியில் தெரிவிப்பதில்லை என்ற உறுதியை இலங்கை அரசு மலேசியாவுக்கு வழங்கியுள்ளது. ஆனால் எமது நிறுவனம் இலங்கை புலனாய்வு அமைப்பிடம் இருந்து திரட்டிய தகவல்களின்படி பத்மநாதனின் தொலைபேசி உரையாடல்களை அரசு ஒட்டுக்கேட்டு தகவல்களை மலேசியப் புலனாய்வு அமைப்புக்கு வழங்கியிருந்தது.

இதனைத் தொடர்ந்து, பத்மநாதனை பின் தொடர்ந்த மலேசிய புலனாய்வுத்துறை, குறிப்பிட்ட விடுதியில் பத்மநாதன், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இருவரை சந்தித்த போது அவரை காண்காணித்து வந்தது.

### மலேசியாவில் தயாமோகன்

பின்னர் மலேசியாவில் தங்கியுள்ள முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகனின் தொலைபேசி அழைப்பினை எடுப்பதற்காக பத்மநாதன் வெளியில் வந்த போது அவரை கைது செய்து தாய்லாந்து கொண்டுசென்று அங்கு வைத்து இலங்கை அதிகாரிகளிடம் கையளித்திருந்தனர். அதன் பின்னர் ஒழுங்கு செய்யப் பட்ட சிறப்பு விமானத்தில் பத்மநாதன் கொழும்பு கொண்டு செல்லப்பட்டுள்ளார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

# இலக்கிய ஒன்றுகூடல்

(ஆனைக்கோட்டை)

அகில இலங்கை கலை இலக்கிய சங்கம் நடத்தும் இலக்கிய ஒன்றுகூடல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நெல்லியடி தடங்கன்புளியடி முருக மூர்த்தி ஆலய மண்டபத்தில் அகில இலங்கை கலை இலக்கிய சங்கத் தலைவர் பொன். சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கிழக்குப் பிரதேசத்தின் அண்மைக்கால இலக்கியச் செல்நெறி எனும் தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் கலாநிதி செ.யோகராசா சிறப்புரையாற்றுவார்.

(ச-23)

# அணு ஆயுதங்...

கோரியுள்ளமை விசாரணைகளின்மூலம்தெரிய வந்துள்ளது .

மேற்குலக நாடுகளுடன் இணைந்து உயிரி ஆயுதங்களை உற்பத்தி செய்வது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் குமரன் பத்மநாதனிடம் நடைபெற்று வரும் விசாரணைகளின் மூலம் இந்தத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கிடைக்கப் பெற்ற பாரியளவு சர்வதேச உதவிகள் குறித்தும் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ச-5)

# வெளிவிவகார அமைச்சின் புதிய செயலாளர் யார்!

## அரசியல் மட்டத்தில் பரபரப்பு

(கொழும்பு)

வெளிவிவகாரத்துறை அமைச்சின் செயலாளர் பாலித கோஹன ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர பிரதிநிதியாக நியூயோர்க்கில் நியமனம் பெற்றதை அடுத்து அவரது பதவிக்கு யார் நியமிக்கப்படப் போகிறார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

தனது புதிய பதவியை பொறுப்பேற்றுக் கொள்வதற்காக கோஹன அடுத்த மாத தொடக்கத்தில் புறப்பட உள்ள நிலையில் அவரது பதவியைப் பொறுப்பேற்கப் போகும் அடுத்த நபர் யார் என்பது இதுவரை தெளிவாகவில்லை என்று கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. சபையின் இலங்கைக்கான நிரந்தர பிரதிநிதியாகப் பதவி வகித்துவரும் பாலிக்க கார தனது பதவிக்காலம் முடிபடைவதற்கு முன்பாகவே தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த வார இறுதியில் நாடு திரும்புகிறார்.

அதேசமயம் ஐ.நாவின் மனித உரிமைகள் குழுவுக்கான இலங்கையின் அடுத்த நிரந்தர பிரதிநிதி யார் என்பதும் இதுவரை முடிபாகவில்லை. அப்பதவியில் இருந்த தயான் ஜயதிலக்க அண்மையில் அரசினால் திடீரென திருப்பி அழைக்கப்பட்டிருந்தார்.

13 வது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜெனீவாவில் அவர் தெரிவித்த கருத்துக்களால் சீற்றமடைந்த ஜனாதிபதி உடனடியாக தயான் ஜயதிலக்கவை திரும்ப அழைத்துக் கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜயதிலகவின் பதவிக்கு அருணி விஜயவர்த்தன அல்லது பிரசாத் காரியவசம் நியமிக்கப் படலாம் என்று இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன. காரியவாசம் ஏற்கனவே ஜெனீவாவில் பணியாற்றி இருக்கின்றார்.

ஜயதிலக்க அவரது பதவியில் இருந்து நீக்கப்பட்டதன் பின்னர் கியூபாவிற்கான தூதுவராக நியமிக்கப்படுவார் என அரச வட்டாரங்களில் இருந்து செய்திகள் வெளியாகின. ஆனால் அவர் அதனை மறுத்துள்ளார்.

(ச-5)

# நாடாளுமன்றத் ...

எதிர்வரும் ஜனவரி இறுதி அல்லது பெப் ரவரி முதல் வாரத்தில் அனேகமாக தேர்தல் கள் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படு கிறது.

பதவியேற்று நான்கு வருடங்கள் முடிந்துவிட்ட நிலையில், ஆறு ஆண்டுகாலப் பதவிக்கான தேர்தலை எப்போது வேண்டுமானாலும் நடத்தலாம் என அரசியலமைப் புச் சட்டம் ஜனாதிபதிக்கு அனுமதி அளித்துள் ளது.

மகிந்த ராஜபக்ஷ 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்டார்.

எதிர்வரும் நவம்பர் 19ஆம் திகதியுடன் அவர் பதவியேற்று நான்கு ஆண்டுகள் நிறைவடைகின்றன. ஆனாலும் அவரது முதலாவது பதவிக்காலத்தில் இன்னும் இரண்டு ஆண்டுகள் எஞ்சியுள்ளன.

இருப்பினும் தனக்கு இப்போது உள்ள பெயரையும் புகழையும் முதலீடாக்கி உடனடியாக ஜனாதிபதி தேர்தலை நடத்தி தனது இரண்டாவது பதவிக்காலத்தை உறுதிப் படுத்திக் கொள்வதில் அவர் உறுதியாக இருக்கிறார்.

இந்நிலையில் எதிர்வரும் ஜனவரி அல்லது பெப்ரவரி மாத முற்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

தற்போதைய நாடாளுமன்றம் 2004 ஏப்ரல் 2 ஆம் திகதி நடத்தப்பட்ட தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்பட்டது. அதன் பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஏப்ரல் 2 ஆம் திகதியுடன் முடிபுக்கு வருகின்றது.

ஆனால், நாடாளுமன்றம் ஒரு வருட காலம் பதவி வகித்த பின்னர் அதனை எப்போது வேண்டுமானாலும் கலைத்துவிடும் அதிகாரம் அரசியலமைப்பு மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் தான் பெருவெற்றி பெற்று இரண்டாவது முறையும் பதவியைக் கைப்பற்றி விட்டால், நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு அதற்கும் உடனடித் தேர்தலை மகிந்த நடத்துவார் என்பது எதிர்பார்க்கக் கூடியதுதான் என தகவல் அறிந்த அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஏனெனில் தனது பெயரும் புகழும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களைக் கைப்பற்ற உதவும் என்று அவர் எதிர்பார்ப்பார் எனவும் அந்த வட்டாரங்கள் கூறின.

(ச-5)

# வன்னியில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு இந்தியா உதவி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மீண்டும் விவசாய நடவடிக்கைகளை தொடர்வதற்கு தேவையான உதவிகளை வழங்கத் தயார் என் இந்தியா அறிவித்துள்ளது.

வடக்குப் பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஆராயும் நோக்கில் விசேட குழுவொன்றை இந்தியா அனுப்பி வைக்கவுள்ளது.

இந்திய விவசாய ஆய்வுப் பேரவையின் விஞ்ஞானிகளைக் கொண்ட [illegible] குழுவொன்று இலங்கைக்கு விரைவில் விஜயம் செய்யும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிலத்தின் தன்மை, காலநிலை, என்ன வகையான பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள முடியும் என்பது குறித்து இந்த விஞ்ஞானிகள் ஆய்வுகளை நடத்த உள்ளனர்.

எதிர்வரும் பருவ காலத்தில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் இந்திய விஞ்ஞானிகள் வருகை அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ச-5)


## துயர் பகிர்கின்றோம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதி இல.10 இல் கடமை புரியும் தாதிய உத்தி யோகத்தர் நல்லையா நற்குணராஜா அவர்களின் தந்தையார்

**கனகசபை நல்லையா**

காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங் களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

விடுதி இல.10 இல் கடமைபுரியும்
உத்தியோகத்தர்கள்.

(3255)


# தொடரும் மழையால் அவலம்...

தொடர்பாக அரசுக்கும் பல தரப்புக்களில் இருந்தும் தகவல்கள் அனுப்பப்பட்டுள்ள போதி லும் இதுவரையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் அரசு மேற்கொள்ளவில்லை.

கொட்டும் மழையைத் தொடர்ந்து பெருக்கெடுத்துள்ள பெருவெள்ளம் மெனிக் பாமில் உள்ள 2,3 மற்றும் 4ஆவது பிரிவு முகாம்களுக்குள் நிரம்பியுள்ளதால் அந்த முகாம்களில் இருந்த சுமார் ஒரு இலட்சம் மக்கள் அங்கிருந்து வெளியேறி வெற்று நிலப்பரப்பில் இருப்பதாகவும் சிலர் வெளியே இடவசதி இல்லாமையால் முகாம்களுக்குள்ளேயே தொடர்ந்தும் மூன்றாவது நாளாகவும் வெள்ளத்துக்குள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பெரு வெள்ளம் வேகமாக அடித்துச் சென்றதால் முகாம்களில் உள்ளவர்களுகென அமைக் கப்பட்டிருந்த தற்காலிக மலசல கூடங்கள் பலவும் சேதமடைந்துள்ளதுடன் அதற்குள் இருந்த கழிவுகள் வெள்ளத்துடன் மக்கள் வசிக்கும் கூடாரங்களுக்குள் புகுந்து இருப்பதாகவும் இதனால் பெரும் சுகாதாரக் கேடுகள் ஏற்படலாம் எனவும் மனிதநேய அமைப்புக்கள் பலவும் அவசர எச்சரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன் ஏற்கனவே போதாத நிலையில் இருந்த மலசல கூட வசதிகள் இதன் மூலம் முற்றாக இல்லாமல் போய் உள்ளது.

கொட்டும் மழையில் நனைந்துகொணடு வெள்ளத்துக்குள் நிற்கும் அவர்கள் தமது கைக் குழந்தைகள், நோயாளர்களைப்பாதுகாப்பதற்கு தம்மை வெளியே செல்ல அனுமதிக்குமாறு விடுக்கும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

தற்போது செய்துவரும் கடும் மழை காரணமாக மிகவும் மோசமான நிலை உரு வாகியிருக்கின்றது என்பதை ஏற்றுக்கொண்டிருக்கும் அரச அதிகாரிகள், இவ்வாறு ஆபத்தை எதிர்நோக்கியிருக்கும் மக்களில் சுமார் ஆயிரம் பேர் மெனிக் பாம் முகாமில் உள்ள வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருப் பதாகவும் தெரிவித்தனர்.

சுமார் ஆயிரம் பேர் முகாமுக்குள்ளேயே வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டதாகத் தெரிவித்த வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் முகாமின் நான்காவது வலயத்திலேயே மோசமான நிலை காணப்படுவதாகவும் அங்கு வடிகால் அமைப்பு வேலைகள் குறிப்பிட்ட காலத்தில் பூர்த்தியடையவில்லை எனவும் தெரிவித்தார்.

அதனால்தான் அந்தப் பகுதி முகாமில் உள்ளவர்கள் பெருமளவு பிரச்சினைகளை எதிர் கொள்கிறார்கள். மழை தொடர்ந்தால் அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் வவுனியா அரச அதிபர் தெரிவித்தார்.

இவர்களுக்கு அரசு தொடர்ந்தும் சமைக்கப்பட்ட உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களைத் தொடர்ந்தும் வழங்கியிருக்கின்றது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

முகாம்களில் பாதிப்புக்குள்ளானவர்களை இருத்துவதற்காக சில பாடசாலைகளை தாம் அடையாளம் கண்டிருப்பதாகவும் தெரிவித்த அரச அதிபர், ஆனால் முகாம் பகுதி சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் அங்குள்ள மக்களை வெளியேற்றுவதற்கு முடியாது இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலைமைகள் காரணமாக முகா முக்கு குடிதண்ணீர் பௌசர்களைக் கூட அனுப்ப முடியாது இருப்பதாக மனிதாபி மான அமைப்புக்களின் பணியாளர்கள் பலரும் தெரிவிக்கின்றார்கள். குடி நீருக்குக் கூட பெரும் நெருக்கடி இதனால் உருவாகி இருக்கின்றது.

முகாம்களில் வழமையாக ஒரு நேர உணவே வழங்கப்படுவதாகவும் ஆனால் கடந்த மூன்று, நான்கு நாட்களாக அதனைக் கூட வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்ப தாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(எ-5)

# இன்று ஒரு தகவல்

## முதலும் முடிவும்

'பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது என்று ஒரு பழமொழி உண்டு.' இந்தப் பழமொழியின் உண்மையான பொருள்;

'எந்த சுபகாரியத்தை ஆரம்பித்தாலும் முதலில் நாம் பிள்ளையார் பூஜையுடன் ஆரம்பிக்க வேண்டும்.' என்று பெரியோர் கள் விளக்கமளித்திருக்கிறார்கள்.

நாம் செய்யும் செயல் பிள்ளையார் பூசையில் ஆரம்பித்து , அனுமார் பூசை யில் முடிவதாக இருத்தல் வேண்டும். அவ்விதம் முடிந்த கதைதான் மகாபாரதம்.

மகாபாரதக்கதை எப்படி ஆரம்பிக் கிறது? பிள்ளையாருடன் தான் ஆரம் பிக்கிறது. வியாசரின் மனதிற்குள் மகாபாரத சுலோகங்கள் தயாராக இருந்தன. இதை எழுதுவதற்கு யாரை அணுகுவதென்று அவர் யோசித்தார். பிள்ளையாரை அணுகினார்.

'நான் சொல்லும் வேகத்திற்கு உங் களால் எழுத முடியுமா ? 'என்று கேட்டார் வியாசர்.

நான் எழுதும் வேகத்திற்கு உங்களால் சொல்ல முடியுமா ? என்று பதிலுக்கு கேட்டார் விநாயகர். இப்படி இவர்கள் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு நமக்கு கொடுத்தது தான் மகாபாரதம்.

இப்படி பிள்ளையாரோடு ஆரம்பித்த மகாபாரதம் அனுமாரோடு முடிகிறது.

எப்படித்தெரியுமா?

போர் முடிந்ததும் என்ன நடைபெறு கிறது?

முதலில் அர்ச்சுனனை ரதத்தில் இருந்து இறங்கும்படி சொல்கிறார் சிறிகிருஷ் ணர்.

அர்ச்சுனனும் கீழே இறங்குகிறான்.

அதன் பின்னர் கிருஷ்ணர் ரதத்தை விட்டு இறங்குகிறார்.

அவர் இறங்கிய உடன் அந்த ரதத்தின் கொடியில் இருந்த அனுமார் மறை கிறார். உடனே ரதம் தீப்பற்றி எரிகிறது. எனவே மகாபாரதம் பிள்ளையாருடன் ஆரம்பித்து அனுமாருடன் முடிகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## அரச காணிகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் புதிய நடைமுறை

(கொழும்பு)

அரச காணிகளை நீண்ட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் குமாரதுங்க குறிப்பிட்டார்.

காணிகளைக் குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக புதிய நடைமுறை ஒன்றை தயாரிப்பதற்கு எண்ணியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

மேலும் உத்தேசத் திட்டம் தொடர்பாக விரைவில் ஜனாதிபதி மற்றும் மாகாண சபைகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் இந்த நடைமுறை தயாரிக்கப்பட்டதன் பின்னர் அரசாங்கக் காணிகளை நீண்ட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கக் காணிகளை நீண்ட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக உரிய நடைமுறை ஒன்று இல்லாததால் சிக்கல் நிலை ஏற்படுவதாகவும் இதனைக் கருத்திற் கொண்டே புதிய நடைமுறை தயாரிக்க தீர்மானித்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

(6-4)




அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் கலைவிழா அல்லையம்பதி துன்னாலை வடிவேலர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.இதில் யாழ்.புதிய கல்லூரி பணிப்பாளர் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் சங்கத்தால் நடத்தப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் வெற்றிபெற்ற ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும், அருகில் சங்கத்தலைவர் பொன் சுகந்தன் நிற்பதையும், கலைவிழாவில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மாணவிகளின் வேப்பிலை நடனத்தையும் படங்களில் காணலாம்.

## ஆசிரியர் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எதிர்வரும் ஒக்டோபருக்கு முன் பதவிஉயர்வு

### கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

ஆசிரியர் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் பதவி உயர்வுகளை வழங்கவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்போது சுமார் 4ஆயிரத்து 5 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த பதவி உயர்வுகளே இவ்வாறு வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

வருடந்தோறும் தொடர்ந்தும் ஆசிரியர்களுக்கான பதவி உயர்வு வழங்க வேண்டியிருந்த பொழுதிலும் அவை வழங்கப்பட்டிருக்கவில்லை என செயலாளர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி ஆசிரியர் பணியில் தகுதிபெற்றதரம் III ஆசிரியர்சேவையில் உள்ளவர்கள் தரம் IIஇற்கும் தரம்II ஆசிரியர் சேவை யில் உள்ளவர்கள் தரம் I இற்கும் பதவி உயர்த்தப்படவுள்ளனர். இது தவிர தரம் I ஆசிரியர் சேவையில் உள்ளவர்கள் கல்வி நிர்வாக சேவைக்கு பதவி உயர்த்தப்படவுள்ளனர். (6-4)

## யாழ்.மாவட்டத்தில் சிறந்த கிராம அலுவலர்களுக்கு ஹேமலதா ஞாபகார்த்த விருது

(யாழ்ப்பாணம்)

மறைந்த கிராம அலுவலர் நவாலியூர் செல்வி. ஹேமலதா செல்வராஜா நினைவாக மாவட்ட மட்டத்தில் சிறந்த கிராம அலுவலர் களுக்கான வருடாந்த ஞாபகார்த்த விருது வழங்கும் வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்டத்தில் சிறந்த கிராம அலுவலர்களாகத் தெரிவு செய்யப்பட்ட மூவர் விருதும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்.செயலக தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபர் வி.பரந்தாமன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற கிராம அலுவலர்களான என்.சுந்தரராஜா( யாழ்ப்பாண பிரதேச செயலகம்), கே.ரி. புவனேந்திரன் (கரவெட்டி பிரதேச செயலகம்), திருமதி ஆர்.இராகினி (நல்லூர் பிரதேச செயலகம்) ஆகியோருக்கே விருதும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

இவ்விருதுகளை யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

நவாலி ஹேமலதா செல்வராஜா சிறுவர் ஞாபகார்த்த நிறுவனம் மேற்படி வருடாந்த விருது வழங்கலுக்கான விருதுகளை ஏற்கனவே வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக் கது.

மேற்படி நிகழ்வில் சகல பிரதேச செயலர்கள், உதவிப் பிரதேச செயலர்கள், சகல கிராம அலுவலர் களும் கலந்துகொள்வர் என மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.யாழ்.மாவட்டத்தில் கிராம அலுவலர்களைக்கௌரவித்து விருது வழங்கும் நடைமுறை இவ்வருடத்தில் இருந்து வருடாவருடம் ஆகஸ்ட் மாதங்களில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

## இராசி பலன்

17.08.2009
(ஆவணி , திங்கட்கிழமை)
துவாதசி முன்னிரவு 11.36 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 3.54 மணிவரை
இராகுகாலம் 7.35- 9.05 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
சித்தாமிர்தம்

| | |
|---|---|
| மேடம் | பிரயாணநன்மை, சகோதரர் உதவி, சுவாரஸ்யம், முயற்சி கைகூடும் |
| இடபம் | விவாதம், வேலைச்சுமை , மாதர் நட்பு, முயற்சிதாமதம் |
| மிதுனம் | நல்லமுயற்சி , தேகநலன் ஆழ்ந்த சிந்தை , விருந்துபசாரம் |
| கடகம் | பிரயாண அலைச்சல், கௌரவக்குறைவு, பிறருக்கு உதவுதல், வீண்பகை |
| சிங்கம் | இஷ்டசித்தி, குடும்பசுகம், விருந்துபசாரம் , சகோதரர்உதவி |
| கன்னி | நல்ல செய்தி, செய்தொழில் விருத்தி, அதிகாரம், போசனசுகம் |
| துலாம் | எதிர்பாராத செலவு, சரீரப்பிரயாசை, கட்டுப்பாடு, உறவினர் சந்திப்பு |
| விருச்சிகம் | பிரயாணபயம், ஆரோக்கியக்குறைவு, வீண்பகை , முயற்சி தாமதம் |
| தனுசு | களஸ்திரநன்மை, சௌக்கிய விருத்தி, போசனசுகம், நல்ல வரவேற்பு |
| மகரம் | சத்துருஜெயம், காரியசித்தி, குடும்பநன்மை, தொழில் முன்னேற்றம் |
| கும்பம் | சிறுவியாதி , தாழ்ந்த சுபாவம், தொழில் சிந்தை, போசன சுகக் குறைவு |
| மீனம் | பயந்தசுபாவம், உடல் நலக் குறைவு, தெய்வசிந்தை, அதிக பிரயாசை |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 30 | 50 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 60 |
| தக்காளி | 20 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 |
| கோவா | 120 | 140 | 130 |
| கரட் | 150 | 160 | 150 |
| பூசணி | 30 | 50 | 30 |
| புடோல் | 20 | 40 | 20 |
| வாழைக்காய் | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 40 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 |
| பாகற்காய் | 30 | 50 | 40 |
| வெண்டிக்காய் | 20 | 40 | 20 |
| கரணைக் கிழங்கு | 40 | 60 | -- |
| பயிற்றங்காய் | 30 | 60 | 30 |
| லீக்ஸ் | 60 | 80 | 70 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 30 | 45 | 40 |
| முருங்கைக்காய் | 140 | 120 | 110 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 30 | 50 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 35 | 25 |

# நல்லூர் ப.நோ.கூ.சங்க பணிப்பாளர் சபை கலைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டு மூன்று அரச ஊழியர்களைக் கொண்ட இடைக்கால பணிப்பாளர் சபையொன்றை யாழ்.மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளர் நியமனம் செய்துள்ளார்.

கடந்த மாதம் இடம்பெற்ற 42 இலட்சம் ரூபா பெறுமதியான மோசடியைத் தொடர்ந்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோசடி சம்பந்தமான விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில், தற்போது தற்காலிக பணிப்பாளர் சபை நியமனம் செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில் நந்தனன், ஆசிரியர் பாலசுப்பிரமணியம், கிராம அலுவலர் எஸ்.அம்பிகைபாகன் ஆகியோர் இந்த தற்காலிகப் பணிப்பாளர் சபைக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (ந-5)

## இலக்கிய ஒன்றுகூடல்

(மருதங்கேணி)

அகில இலங்கை கலை இலக்கிய சங்கம் நடத்தும் இலக்கிய ஒன்றுகூடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் அகில இலங்கை கலை இலக்கிய சங்கத் தலைவர் பொன் சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக மொழித் துறை தலைவர் கலாநிதி செ.யோகராசா கிழக்கு பிரதேசத்தில் அண்மைக்கால இலக்கிய செல்நெறி என்னும் விடயம் பற்றி சிறப்புரை நிகழ்த்தவுள்ளார். (6-4-35)

## ஆங்கில பாட பயிற்சி நெறியின் நிறைவு நாள் நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் அல்லாத ஆசிரியர்களுக்கான ஆங்கில பாடப் பயிற்சி நெறியின் நிறைவுநாள் நிகழ்வுகள் நாளை செவ்வாய் காலை 8 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பத்து தினங்கள் நடைபெற்ற மேற்படி பயிற்சி நெறியில் கலந்துகொண்ட அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படியும் அவர்களுக்கான கொடுப்பனவுகள் அன்றைய தினம் வழங்கப்படவுள்ளதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-4-29)

## மண்டலாபிஷேக பூர்த்தியும் இறுவட்டு வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மகாகாளி அம்பாளின் மண்டலாபிஷேக பூர்த்திக் கலசாபிஷேகமும் தோத்திரப் பாடல் இறுவட்டு வெளியீடும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு சாவகச் சேரி வாரிவனம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் மா.வேதநாதன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் ஜி.என்.இராதாகிருஸ்ணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இறுவட்டை முதன்மை விருந்தினர் மா.வேதநாதன் வெளியிட்டு வைக்க முதல் பிரதியை அனுசரணையாளரும் திருப்பணியாளருமாகிய வை.சிவராஜா பெற்றுக்கொள்வார். வெளியீட்டுரையை தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்விப் உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா நிகழ்த்துவார். (ஓ-4)

# நாவற்குழி புகையிரத நிலையத்தை புனரமைக்க

## கொமர்ஷல் வங்கி நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் நாவற்குழி புகையிரத நிலையத்தை புனரமைக்க கொமர்ஷல் வங்கியால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டுக்கான புகையிரத போக்குவரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் வடக்கின் வசந்தம் செயற்திட்டத்தின் கீழ் நாவற்குழி புகையிரத நிலையத்தை முழுமையாக புனரமைப்புச் செய்வதற்கு கொமர்ஷல் வங்கி 18 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய் துள்ளது. (ந-7)

**தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு**

# யாழ். பொதுசன நூலகத்தால் மாபெரும் வாசிப்புத்திறன் போட்டி

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ்.பொதுசன நூலகத்தால் நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் வழிகாட்டலில் மாபெரும் வாசிப்புத்திறன் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப் போட்டி தரம் 5 வரை கல்வி கற்போர், தரம் 6 முதல் தரம் 10 வரை கல்வி கற்போர் என இரு பிரிவுகளாக நடத் தப்படவுள்ளது.

போட்டிக்கென சகல பொருட்துறை சார்ந்த நூல்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளதுடன் அந் நூல்களை ஓகஸ்ட் 15 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 15 ஆம் திகதி வரை வாசிப்பதற்கு அனுமதிக்கப்படும் எனவும் 10 வாரகாலம் வாரம் ஒரு நூல் வீதம் வாசிக்க வேண்டும் எனவும் யாழ்.பொதுநூலக பிரதம நூலகர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஒவ்வொரு கிழமையும் அதாவது ஞாயிறு -சனி வரை ஒரு நூல் கட்டாயம் வாசிக்கவேண்டும். இதில் சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அவ் வாரம் வாசித்த நூல்கள் சார்பான கேள்விகள் மத்தியஸ்தர் ஒருவரால் கேட்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படும்.

எல்லா வார மதிப்பீட்டின் அடிப்படையில் 3 பரிசில்களும் ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

போட்டியில் யாழ்.குடாநாட்டின் எப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றலாம் எனவும் இரவல் பெறும் அங்கத்தவராகவோ அல்லது சாதாரண வாசகராகவோ பிரதான நூலகத்தில் அல்லது கிளை நூலகத்தில் பதிந்திருத்தல் வேண்டும் எனவும் போட்டி பிரதான நூலகத்தில் மட்டுமே நடைபெறவுள்ளதாகவும் பிரதம நூலகர் மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

## சிறுவர் கண்காணிப்புக்குழு கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்புக்குழு கூட்டம் நாளை மறுதினம் புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேசச் செயலர் இ. வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் உத்தியோகத்தர்கள் கடந்த மாதத்திற்கான வேலைத் திட்ட முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (6-4-19)

## பதிவுகள் மேற்கொள்ளல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்கு விடுவிக்கப்பட்ட பகுதிகளில் நெற்செய்கையில் ஈடுபடும் வேறு கிராம மக்கள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பதிவுகளை மேற்கொள்வதற்கான உரிய ஆவணங்களுடன் வருகை தந்து தத்தமது சம்மேளன நிர்வாகிகளிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தென்மராட்சி தெற்கு மீளக்குடியமர்வோர் சங்கத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (6)




## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான 5E முறையில் கணிதம் கற்பித்தல் செயல்முறை செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலய்க கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (6-4-19)

## சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் தொடர்ச்சியாக நடத்திவரும் விழிப்புணர்வுக் கருத்தரங்கில் "இலங்கையில் சனநாயக நீரோட்டத்தில் பெண்களின் தலைமை" எனும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நவாலி வடக்கு மாதர்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நிலைய பிரதிநிதிகளான சட்ட உதவியாளர் நகுலேஸ்வரி இராமச்சந்திரன் திட்ட அலுவலர் செல்வி வேலாயுதம் சுவேந்தினி ஆகியோரும் வளவியலாளர்களாக விரிவுரையாளர் தேசிய கல்வி நிறுவகம் திருமதி தனலட்சுமி வில்வநாதன், சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கவுள்ளனர். (4-6)

## மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தால் வருடந்தோறும் இலவசமாக வழங்கப்பட்டு வரும் மூக்குக் கண்ணாடிகள் இம்முறையும் வழங்கப்படவுள்ளது.

கண்பரிசோதனை செய்து சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இக் கண்ணாடிகள் வழங்கவுள்ளதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (6-30)


## கலைஞர் விபரத் திரட்டு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் வெளியிடப்பட்ட கலைஞானம் கலைஞர் விபரத்திரட்டு நூலினை அன்றையதினம் பெற்றுக்கொள்ளாதவர்கள் நல்லூர் பிரதேச செயலகப் பிரதேச கலாசாரப் பேரவையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியுமென பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர். -(6-30)

## புற்றுநோயாளர் நல்வாழ்வுக்கான அன்பளிப்பு

நல்லூர் கந்தன் ஆலய மாம்பழத் திருவிழா உற்சவ தினமான இன்று திங்கட்கிழமை நல்லூர் பழமுதிர்ச்சோலை குளிர்பான நிலையத்தினர் காலை தொடக்கம் மாலை வரை வாடிக்கையாளர்களிடம் இருந்து கிடைக்கும் அன்றைய வருமான முழுத் தொகையினையும் புற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் நல வாழ்விற்காக அன்பளிப்பு செய்யவுள்ளனர். (6-136)



இலங்கை வங்கியின் 70ஆவது ஆண்டு பூர்த்திவிழா நிகழ்வுகள் அண்மையில் இலங்கை வங்கியின் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வணபிதா நேசகுமார் அடிகளார் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் வங்கி உத்தியோகத்தர்களான ரி.சுதாகரன், கே.கே.விக்னேஸ்வரன் ஆகியோர் நிற்பதையும், முகாமையாளர் என்.சச்சிதானந்தன் வரவேற்புரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

## வினாத்தாள் 01 இன் விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. 4 | 2. 1 | 3.3 | 4. 2 | 5. 1 | 6. 3 | 7. 2 | 8. 4 | 9. 3 | 10. 4 |
| 11. 3 | 12. 1 | 13. 2 | 14. 1 | 15.3 | 16. 3 | 17. 2 | 18.3 | 19. 1 | 20.4 |
| 21. 4 | 22. 3 | 23.3 | 24. 1 | 25.1 | 26.1 | 27.2 | 28.3 | 29.2 | 30.2 |

31.2 32.1 33.மீனா 34.கீதா 35.வேம்பு 36.கடிதம் 37.கறையான்

38. ஆந்தை 39. 1.கோலக்கடல் 2.நீலம்+வானம்

40. 1.தோன்றப் 2. இரவு அல்நிசி

### மக்களை மீளக் குடியமர்த்தும் பொருட்டு

# நெடுங்கேணியில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் துரிதம்

(கொழும்பு)

வவுனியா வடக்கில் உள்ள நெடுங்கேணிப்பிரதேசத்தில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஓரிசன் என்ற இந்திய கண்ணிவெடிகளை அகற்றும் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

அத்துடன் வவுனியா வடக்கில் உள்ள 28 கிராமங்களில் மக்களை குடியமர்த்துவதற்கு வசதியாக கட்டட நிர்மாணம், வீதிகள் புனரமைப்பு, குடிநீர், மின்சாரம் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

நெடுங்கேணிப்பிரதேசத்தில் புதைத்துவைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றியவுடன் அங்கு மக்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் இருக்கும் மக்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் குடியேற்றுவது தொடர்பாக ஆராய்வதற்காக அத்தியாவசியதேவைகள் ஆணையாளர் நாயகம் திவாரட்ண நாளை செவ்வாய்க்கிழமை வவுனியாவில் உயர்மட்ட மாநாடு ஒன்றை கூட்டவுள்ளார்.

குறித்த மாநாட்டில் அகதிகளை மீள குடியேற்றும் காலம் தொடர்பாக தீர்மானிக் கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (6)

# விமான நிலையத்தில் விசா வழங்கும் நடைமுறை நீக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தரும் வெளி நாட்டவர்களுக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து 'விசா' வழங்கும் நடைமுறையை நீக்க வேண்டுமென பாதுகாப்பு அமைச்சு முன்வைத்துள்ள யோசனையை அரசாங்கம் அராய்ந்து வருவதாக தெரியவருகின்றது.

இவ்வாறு விமானநிலையத்தில் வைத்து விசா வழங்குவதற்குப் பதிலாக வெளி நாடுகளில் உள்ள இலங்கையின் தூதரகங்கள் ஊடாகவே விசாவை வழங்கும் நடை முறையை பின்பற்ற வேண்டும் என பாதுகாப்பு அமைச்சு சிபார்சு செய்துள்ளது.

உல்லாசப்பயணிகள் என்ற பெயரில் பயங்கரவாதிகள் நாட்டுக்குள் நுழைவதற்கு இவ்வாறு விசா வழங்கும் நடைமுறை வழி வகுப்பதாக அமைந்துவிடலாம் என்பதால் இம்முறையை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பாதுகாப்பு அமைச்சு கோரியுள்ளது.

உல்லாசப்பயணிகளின் அதிகவரவிற்காக கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்து இறங்கும் போது இலங்கைக்குள் நுழைவதற்கான விசாவை வழங்கும் முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

அண்மைக்காலத்தில் உல்லாசப் பயணிகள் என்ற பெயரில் வந்த 309 வெளிநாட்டவர்கள் வேறு நோக்கங்களுக்காக வந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (6)





## கொம்பனி விலையில் பெற்றுக்கொள்ளலாம்

யாழ். குடாநாட்டில் புதிதாக விற்பனை செய்ய விரும்புபவர்களும் ஏற்கனவே விற்பனை செய்பவர்களும் யாழ். மாவட்ட விநியோகஸ்தர்களாகிய எம்மிடம் தங்களை பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு தங்கள் ஸ்தாபனத்திற்கு நேரடியாக விநியோகிக்கப்படும்.

(சி/3043)

# சிறைக்கைதிகள் பரிமாற்றம் குறித்து இலங்கையுடன் இந்தியா பேச்சு

(கொழும்பு)

கைதிகள் பரிமாற்றம் குறித்து இலங்கையுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்திவருவதாக இந்திய வெளிவிவகார இணை அமைச்சர் சசி தரூர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

இலங்கைச் சிறையிலுள்ள கைதிகளை மீட்பது குறித்து நாம் இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். ஆனால் அதற்கு காலம் எடுக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கைச் சிறையிலுள்ள இந்திய கைதிகள் தமது நிலைமை குறித்து இந்திய அதிகாரிகள் பராமுகமாக இருப்பதாக குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தாம் 16 வருட காலத்தை சிறையில் கழித்துள்ளதாகவும் தம்மை விடுவிப்பதற்கு இந்திய அதிகாரிகள் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை என மேற்படி கைதிகளில் ஒருவர் கூறியதாக இந்திய செய்திச் சேவையொன்று தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் 43 இந்திய கைதிகள் இருப்பதாகவும் அவர்களில் 28 பேர் வெலிக்கடையிலும் 10 பேர் நீர் கொழும்பு சிறைச்சாலையிலும் ஐவர் அனுராத புரத்திலும் இருப்பதாக மேற்படி கைதி தெரிவித்துள்ளார்.

இக் கைதிகளில் பெரும்பாலானோர் தமிழ் நாடு மற்றும் கேரள மாநிலங்களைச் சேர்ந்தவர்களாவர். (6)

# முகாம் வாழ்வை மக்கள் விரும்பவில்லை ; வாக்களிப்பு வீழ்ச்சிக்கு இதுவே காரணம்

## அமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

வவுனியாவில் நலன்புரி முகாம்களிலுள்ள மக்கள் விரைவாக அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்வதனையே விரும்புகின்றனர். நடந்து முடிந்த வடமாகாண உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பில் வீழ்ச்சி ஏற் பட்டமைக்கு இதுவே காரணம் என்று தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த யாழ். மாநகரசபை மற்றும் வவுனியா நகரசபைத் தேர்தல் முடிபுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வவுனியா நலன்புரி முகாம்களிலுள்ள மக்களுக்கு அரசாங்கம் அனைத்து வசதிகளைச் செய்து கொடுத்தாலும் அந்த மக்கள் விரைவாக அவர்களின் சொந்த இடங் களில் குடியமர்வதனையே விரும்புகின்றனர்.

நடந்து முடிந்த வடமாகாண உள்ளூராட்சித் தேர்தல் முடிபுகள் கூட இந்த உணர்வலைகளையே வெளிக்காட்டுகின்றன. இந்த இரு தேர்தல்களிலும் மக்கள் ஆர்வம் காட்டவில்லை. அவசர அவசரமாக தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் பயங்கரவாத சூழ்நிலையில் பழக்கப்பட்ட இந்த மக்கள் ஒரு சாதாரண வாழ்வுக்கான நிலையை இன்னும் அடையவில்லை. அவ் வாறான தொரு வாழ்வு நிலைக்கு அவர்கள் பழக்கப்பட வேண்டும்.

தமிழ்க்கட்சிகள் ஒற்றுமையாக ஓரணியில் நின்று இந்தத் தேர்தல்களைச் சந்தித்திருந்தால் அதிக ஆசனங்களைப் பெற்றிருக்க முடியும். ஆனால் அவ்வாறான ஒன்றுமை என்பது நடக்கக்கூடியதொன்றல்ல என்றார். (6)

# பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு எதிராக கடந்த ஆண்டில் 1380 முறைப்பாடுகள்

(கொழும்பு)

பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு எதிராக கடந்த ஆண்டில் 1380 முறைப்பா டுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பொலிஸாரின் உதாசீனம் மற்றும் செயற்படாத்தன்மை தொடர்பிலேயே அதிக குறைபாடுகள் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பொலிஸாரின் அதிகாரத் துஷ்பிரயோகம் தொடர்பாக 238 முறைப்பாடுகளும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக 92 முறைப்பாடுகளும் அரசியல் கட்சிகளுக்கு சார்பாக செயற்பட்டமை தொடர்பில் 177 முறைப்பாடுகளும் சட்டவிரோதமான கைதுகள் தொடர்பாக 34 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(6-14)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



இலங்கை போக்குவரத்துச் சபையில்
கடந்த 40 வருடங்கள் சேவையாற்றி இன்று
ஓய்வுபெறும் **திரு.சி.தெய்வேந்திரன்**
விசாரணை அதிகாரி (வடமாகாணம்)
அவர்களுக்கு போக்குவரத்து
அமைச்சினால் மேலும் ஒரு வருட சேவை
நீடிப்பு வழங்கியதையிட்டு பாராட்டி
வாழ்த்துகிறோம்


தொழிற்சங்க வேறுபாடு இன்றி விசாரணை நடாத்தி நீதியான தீர்ப்பு வழங்கிய **திரு சி.தெய்வேந்திரம்** ஐயா அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

**திரு.எம்.எச்.சாஹிர்-இணைப்பாளர்,**
சிறீலங்கா சுதந்திர கட்சி தொழிற்சங்கம்

**திரு.கே.யோகலிங்கம் -செயலாளர்,**
தேசிய ஊழியர் சங்கம் மன்னார்- வவுனியா

(3237)


# நல்லூரான் திருவடிக்கு இன்று 22ஆம் திருவிழா



இன்று ஒருமுகத் திருவிழா. மணியோசை ஒலிக்க சுவாமி உள்வீதி வலம் வருவார்

# கந்தனுக்கு வணக்கம்

| | | | |
|---|---|---|---|
| கொங்கு | நாட்டுச் | செங்கரும்பின் | சுவையையும் |
| கொங்கார | மலரின் | நறும் | மணத்தையும் |
| குங்குமவலரி | மலரின் | சிவப் | பழகையும் |
| குங்கிலியப் | புகையின் | நறும் | மணத்தையும் |
| அங்குலியின் | கணீ | ரென்ற | ஓசையையும் |
| அங்கீசோரிச் | சாற்றின் | தண்மைக் | குளிர்ச்சியையும் |
| சங்கத்தமிழ்க் | கீதங்களின் | சங்கீத | ஒலியையும் |
| சங்குகளி | னரசியான | வலம்புரியின் | ஓசையையும் |
| எங்கும் | சென்று | நன்கு | அனுபவித்தும் |
| எங்கள் | நல்லூரிலே | அவைகளை | மிஞ்சும் |
| தங்கமாம்பழம் | சுவைக்கவந்த | கந்தனுக்கு | வணக்கம் |

*கவிஞர் க.யோகராசா, அரியாலை*

# நல்லையில் வந்துதித்த கந்தா போற்றி

கங்கை நதியில் சங்கமித்த "காங்கேயா" - போற்றி
சரவணப் பொய்கையில் தவழ்ந்த "சரவண பவனே" - போற்றி
கார்த்திகை மாதர் அணைத்தெடுத்த "கார்த்திகேயா" - போற்றி
உலகம் உய்ய வந்த "ஒரு திருமுருகனே" - போற்றி
உமை அம்மை ஒன்றிணைத்த "ஆறுமுகனே" - போற்றி
சுக்கிலபட்ச சட்டியில் துணைபுரியும் "சுப்பிரமணியா" - போற்றி
தந்தைக்குப தேசம் செய்த "சற்குருநாதனே" -போற்றி
நல்லையில் "நீராக", "தீயாக", "பதியாக" வந்துதித்த "கந்தா" - போற்றி

வே.பி.சண்முகநாதன்,வேலணை

# ஒழித்திடுவாய் வேற்றுமையை

நல்லையம்பதியிலே கோயில்கொண்ட குமரனே குகனே
நாடி வருபவர் துன்பத்தைப் போக்கும் நல்லூரானே முருகா
நின்பாதம் தொழுது நித்தமும் உனதருள் பெற்று வாழ
நீவிர் அருள்புரிந்து நித்திலத்தில் எமை ஆட்கொள்வாய்

எம்முள்ளே நீ நிறைந்து எம்மை வழி நடத்திடுவாய்
ஏற்றமிகு வாழ்வுதனை எம்மவர்க்கு வழங்கிடுவாய்
ஐங்கரனின் துணையோடு ஐஸ்வரியம் தந்தெம்மை
ஒற்றுமையாய் வாழ்வதற்கு ஒழித்திடுவாய் வேற்றுமையை.

இராசநாயகம், திருநெல்வேலி

# உன் திருவடியே தஞ்சம்

செந்தமிழ் செப்பிடும் செந்தமிழழகா
எழில் கொண்ட கலை தந்த முத்தமிழ் மைந்தா
சுவைகொண்ட அமுதென்ற பைந்தமிழ் வேலா
இசை பூமிசையென பயிலும் மொழிகளின்
தலையென வரும் சங்கத்தமிழழகா !

கற்காத பேதையரும் கற்றவரும் ஒன்றாகி
தொழுதிட கனியாகக் கனிகின்ற கருணைவேலா
சிறியவள் குரல்கேட்டு உன் முகம் திருப்பு
உன் திருவடியே தஞ்சம் !

*ஆ. இந்திரா ,ஆச்சிரமம் ,கரவெட்டி*


ஆறுபடை கொண்டெழுந்த ஆறுமுகத்தானே!
உன் திருமுகம் காட்டி தீர்த்திடு வினைதனை !



**AHEZER SUPPLIERS**
**DURO JAFFNA OPERATION CENTER**
289, பிறவுண்வீதி, கலட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.

# புலமைப்பரிசில் முன்னோடிப்பரீட்சை
# ஓகஸ்ட் -2009

ஆசிரியர் T.மன்மதகாந்தன்

ஆசிரியர் T.திலீப்குமார்
கொழும்பு

**வினா இலக்கம் 02**
**பரீட்சை இலக்கம் 15**

நேரம் :-1மணி 15 நிமிடம்

01) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து (1) தொடக்கம் (10) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அப்போது அகிலாவுக்கு ஆறு வயது இருக்கும் ஒரு நாள் அவளுடைய அப்பா ஒரு சிறு தகரப்பெட்டி ஒன்றை வாங்கி வந்தார். பல வர்ணங்களில் சித்திர வேலைப்பாடு செய்திருந்த அந்தப் பெட்டியின் முகப்பில் ஒரு கண்ணாடி பதித்திருந்தது. அந்தத் தகரப் பெட்டி அகிலாவின் குழந்தை உள்ளத்தை வெகுவாக கவர்ந்தது. அதில் மயங்கிப்போன அகிலா அந்தப் பெட்டியை மேலும் கீழுமாக பல தடவை புரட்டிப் புரட்டிப் பார்த்தாள. அப்பொழுது தான் அதில் பதித் திருந்த கண்ணாடியைக் கண்டாள். கண்ணாடியில் அவளது முகம் பூரணமதி போல பிரகாசமாகத் தெரிந்தது. பளபள வென இருந்த அந்தத் தகரப் பெட்டியை எடுத்துக்கொண்டு தனது தாயிடம் ஓடினாள்.

1.கண்ணாடியில் தோன்றிய முகத்தின் உருவத்தை எவ்வாறு அழைப்பர்?
---------------------------------------------

2. இப்பந்தியில் உள்ள காலப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக?
---------------------------------------------

3. இப்பந்தியில் உள்ள பெயரெச்சம் ஒன்றைத் தருக?
---------------------------------------------

4. இப்பந்தியில் உள்ள வினையெச்சம் ஒன்றைத் தருக?
---------------------------------------------

5. இங்கு இடம் பெற்றுள்ள இணைமொழி எது?
---------------------------------------------

6. இங்கு காணப்படும் உவமானம் ஒன்றினை எழுதுக?
---------------------------------------------

7. "பூரணமதி" தோன்றும் நாளை எவ்வாறு அழைப்பர்?
---------------------------------------------

8. இப்பந்தியில் இடம்பெற்றுள்ள உயர்திணை படர்க்கை ஆண்பால் பெயர்ச்சொல் ஒன்று தருக?
---------------------------------------------

9. பின்வரும் வாக்கியத்தில் உள்ள பெயரடைச் சொற்களின் கீழ்க் கோடிடுக. அந்தத் தகரப்பெட்டி அவளது உள்ளத்தைத் வெகுவாகக் கவர்ந்தது?
---------------------------------------------

10. இப்பந்தியில் உள்ள இரட்டைக்கிளவி ஒன்று தருக?
---------------------------------------------

02) பின்வரும் தொடர்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் கருத்தை எழுதுக.

1. எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லாக்கு
---------------------------------------------

2. சீட்டுக் கொடுத்தல்
---------------------------------------------

03) பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியீடுகளை இடுக.

1. நாற்றமிழ்ப் புலவரே தமிழ் வளர்க்கும் தங்கள் வாழ்க்கையில் வறுமையா
---------------------------------------------

2. ஆறு, குளம், ஏரி, கிணறு இவை யாவும் நீர்நிலைகளாகும்
---------------------------------------------

04) பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக

1. முனிவர்கள் வாழும் இடம்
(அந்தப்புரம் / கோயில் / பன்னசாலை)

2. எழுபத்தைந்து ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா
(பொன்விழா / வைரவிழா / பவளவிழா)

05) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வசனம் அமைக்குக.

1. மகாவித்தியாலயம் / கல்வி / பாரதி / விளங்கியது / சிறந்தது
---------------------------------------------

2. குறைவு/ கொம்பு / தொகை / மான்களின் / மிகவும் / உள்ள
---------------------------------------------

06) வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை எழுதுக

1. 
He is.............................The Cloths
(bathing/ watering/ washin g/ drinking)

2. உருவில் உள்ள நாயின் உறுப்புக்களுக்குரிய ஆங்கிலச் (சொற்களைத் தருக)

1.---------------------------------



2.---------------------------------


07) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக

1. தயவு செய்து இங்கே வாருங்கள் .........................................................

♦ 08ஆம் 9ஆம் வினாக்களில் உள்ள சிங்களச் சொல்லின் தமிழ் கருத்தை எழுதுக.

08.

09





10  (..............................)

உருவில் உள்ள பறவையின் பெயரை சிங்களத்தில் எழுதுக.

♦11தொடக்கம் 36 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

11.மிகத் தொலைவில் இருக்கும் இரையையும் தொலைவில் இருந்தே இனங்காணக் கூடிய கூர்மையான பார்வையுடைய பிராணி
1.காகம் 2. கழுகு 3.கோழி 3.வெளவால்

12. 
உருவில் உள்ள பறவை
1.வான்கோழி
2.காட்டுக்கோழி
3.கானாங்கோழி
4.நெருப்புக்கோழி

13.பொரித்து உண்ணும் வடகம் தயாரிக்கப் பயன்படும் பூ
1. வேம்பம் பூ 2. இலுப்பம் பூ 3.தாமரைப்பூ 4. முருக்கம் பூ

14. வெயிலில் காயவைத்து பேணப்படும் உணவுப் பொருளான பினாட்டு பெறப் படும் பழம
1. வில்வம்பழம் 2. விளாம்பழம் 3. பனம்பழம் 4. இலுப்பம்பழம்

15. 
உருவில் உள்ள வித்துப் பரம்பலடைவது
1.விலங்குகளால் 2. நீரால்
3.காற்றால் 4.அதிர்ந்து வெடித்து.

16. கார்த்திகை உடுத்தொகுதியில் உள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கை
1.நான்கு 2. ஐந்து 3.ஆறு 4.எட்டு

17. இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட தரமான பண்டம் என்பதற்கான தரச்சான்று



(1) (2) (3) (4)

18. கொதித்தாறிய நீரைப் பருகுவதால் தவிர்க்க கூடிய நோய்
1.மலேரியா 2.கழிச்சல் நோய் 3.சலரோகம் 4. மரஸ்மஸ்

19. சூரிய வெப்பம் அதிகமாக உள்ளவேளைகளில் தொலைவில் நீர் இருப்பது போல தோன்றும் பொய்த் தோற்றம்
1.ஏரி 2.குளம் 3. நீர்வீழ்ச்சி 4.கானல்நீர்

20. எமது பாதுகாப்புத் தொடர்பான சரியான செயற்பாடு
1.மலையுச்சியிலிருந்து பள்ளத்தை நோக்கி கைப்பிடியை பிடிக்காது சைக்கிள் ஓட்டிச் செல்லுதல்
2.'இங்கே குளிப்பது ஆபத்தானது' என அறிவித்தல் பலகை காணப்படும் ஒகு குளத்தில் இறங்கி குளிக்க முற்படுதல் .
3. பாரிய மரமொன்றின் உச்சிக்கிளையைத் தறிக்கப்படுவதை அருகே இருந்து பார்த்துக் கொண்டிருத்தல்
4. பாதசாரிகள் வீதியின் வலப்பக்கத்தால் நடந்து செல்லல்.

21."நான் வீட்டிலும் பாடசாலையிலும் பொறுப்புடன் வேலை செய்யும் ஒரு சிறு பிள்ளையாவேன்" என்பது
1.மலர்வு 2.பிரார்த்தனை 3.மனவுறுதி 4.மனதைத்தளர்த்துதல்

♦ தரப்பட்ட இலங்கைப்படத்தைப் பயன்படுத்தி 22ஆம்,23ஆம் வினாக் களிற்கு விடை தருக.




22. இந்த சமுத்திரத்தின் நடுவினிலே
இலங்கும் தீவாம் இலங்கை இது
தந்த செல்வமே களனிநதி
தரணி போற்றும் கல்யாணி

இப்படலில் குறிப்பிடப்படும் நதியைக் குறிக்கும் எழுத்து எது?
1. W 2. X 3. Y 4. Z

23. தேனீ போல உழைக்கும் மக்கள்
சேர்ந்து வாழும் நகரம்
ஞானி யோகர் சுவாமி நல்லூர்
நாவலர் போற்றும் நகரம்.

இப்பாடலில் குறிப்பிடப்படும் நகரத்தைக் குறிக்கும் எழுத்து எது?
1. A 2. B 3. C 4. D

24. ஒருவர் சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய நிறச் சாயங்களை வைத்திருந்தார் ஆனால் அவருக்கு பச்சை நிறம் தேவைப்பட்டது எனின் அவர் கலக்க வேண்டிய நிறச்சாயங்கள்.
1. சிவப்பு,நீலம் 2. சிவப்பு,மஞ்சள்
3. நீலம், வெள்ளை 4. மஞ்சள், நீலம்

25."போர்த்தேங்காய் அடித்தல்" விளையாட்டு நடைபெறும் மாதம்
1. தை 2. மாசி 3. சித்திரை 4. ஆடி

26. மடிப்புக்குலையாதிருக்க தைக்கப்படும் தையல்



1) 2) 3) 4)

27. 
இக் குறியீட்டினால் கருதப்படுவது
1.வீதி செப்பனிடும் வேலை நடைபெறுகின்றது
2.முன்னால் சாய்வான பாதை
3.முன்னால் கற்பாறைகள் விழும்
4.குண்டும் குழியுமான வீதி

28. அனுராதபுரத்தில் உள்ள புனித வெள்ளரசு மரத்தின் கிளையை இந்தியா வில் இருந்து இலங்கைக்கு கொண்டுவந்தவர்.
1.பராக்கிரமபாகு 2.தாதுசேனன் 3.விஜயன் 4.சங்கமித்தை


29. தூண்டிலின் மூலம் மீன் பிடிக்கும் போது தூண்டிலில் கொழுவப்படும் இரை
1.நாக்கிளிப்புழு 2.பயற்றங்காய் 3. சோளம் 4.கரட்

30. சைக்கிள் மிதியுடன் இணைக்கப்பட்டுள்ள பற்சில்லின் பற்களின் எண ணிக்கை
1. 18 2. 22 3. 44 4. 60


31.'பொலி பொலி தாயே பொலி தம்பிரானே பொலி" என்னும் பாடல்
1.அரிவு வெட்டும் பாடல் 2.சூடு மிதப்புப் பாடல்
3.கும்மிப் பாட்டு 4.கோலாட்டம்

32. கிராமப்புற வியாபாரிகள் வாழைப்பழத்தை விரைவாகப் பழுக்கச் செய் யும் முறை.
1. புகையூட்டல் 2. நீர் தெளித்தல்
3. மணலில் புதைத்தல் 4.உப்புக் கரைசல் தெளித்தல்

33. உடலுக்கு சக்தியைத் தரும் போசாக்கு பதார்த்தங்கள்
1. காபோவைதரேற்று, கொழுப்பு 2. புரதம், இரும்பு
3. விற்றமின், கனியுப்புக்கள் 4. புரதம், நீர்


34.


இவ் அசையும் வண்ணாத்துப்பூச்சியின் தலையில் (A) என குறிப்பிடப்பட்ட இடத்தில் இருக்கக்கூடிய பொருள்
1.ஈர்க்கு 2.குண்டூசி 3.நூல் 4.பிசின்

35.

இவ் இலட்சனையினால் குறிப்பிடப்படும் அரச நிறுவனம் எது?
1. இலங்கை போக்குவரத்து சபை
2. தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை
3. சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை
4. தேசிய பாதுகாப்புச் சபை

36. இராவணன் சீதையை இலங்கைக்கு கடத்திவர பயன்படுத்தியதாகக் கூறப்படும் போக்குவரத்து சாதனம்
1.குதிரை வண்டி 2.விமானம் 3.புட்பகவிமானம் 4.அன்னப்பறவை

♦ **மரங்களில் இருந்து தளபாடங்கள் செய்யப்பயன்படுத்தும் சில உபகரணங்கள் கீழே காணப்படுகின்றன.**





***பின்வரும் பணிகள் செய்வதற்கு மிகவும் உகந்த கருவியின் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.***

37. பலகைகளில் சிறு துவாரம் இடுவதற்கு..........................................
38. பனை, தென்னை மரங்களைப் பிளப்பதற்கு..........................................

♦ பின்வரும் அடைப்பில் சில பூச்சிகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.


| | | | |
|---|---|---|---|
| தும்பி | கரப்பான்பூச்சி | பிள்ளைப்பூச்சி | கும்பிடுபூச்சி |
| நுளம்பு | சிலந்தி | நீர்ப்பூச்சி | வெட்டுக்கிளி |

ஒவ்வொரு உருவிலும் காட்டப்பட்டுள்ள பூச்சிகளின் பெயரைத் தெரித் தெடுத்துப் புள்ளிக்கோட்டில் எழுதுக.




39.---------------------- 40.......................... 41..................... 42.......................

43.மின் குமிழ் ஒன்று, உலர்மின்கலம் இரண்டு, வயர்த்துண்டுகள் மூன்று தரப்பட்டு அதில் ஒரு வயர் ஒரு மின்குமிழுடனும் ஒரு உலர்மின் கலத் துடனும் இணைக்கப்பட்டுள்ளது. ஏனைய இரு வயர்த் துண்டுகளையும் மின்குமிழ் ஒளிரத்தக்கவாறு இரு உலர்கலங்களுடன் சரியாக இணைக்குக.



♦ ஒரு கிராமத்தில மரக்கறி பயிரிடுவோர் எண்ணிக்கை தொடர்பான நிரல் வரைபு கீழே தரப்பட்டுள்ளது.





44. கிராமத்தில் அதிகமனனோர் பயிரிடும் பயிர் எது?
----------------------------------------


45. கீரை வகைகளை பயிரிடுவோர் எத்தனை பேர்?
----------------------------------------

46. இங்கு மரக்கறி பயிரிடுவோரின் மொத்த எண்ணிக்கை யாது?
----------------------------------------

47. கழங்கு வகை பயிரிடுவோரிலும் பார்க்க கீரை வகை பயிரிடுவோர் எத்தனை பேர் அதிகம்
----------------------------------------

48.



வரிப்படத்தில் காணப்படும் இரு பென்சில்களின் நீளங்களுக்கிடையிலான வித்தியாசம் எவ்வளவு?
----------------------------------------

49.


A B

A பாத்திரத்தில் இருந்து B பாத்திரத்தில் இரண்டு தடவை நீர் ஊற்றப்பட்டது. B பாத் திரம் நிரம்ப இன்னும் ஊற்ற வேண்டிய நீரின் அளவு யாது?
----------------------------------------

50. எந்தவொரு தாள்க்காசையும் வெளிச்சத்தை நோக்கிப் பிடிக்கும் போது ஊடு தெரியும் பகுதியில் காணப்படும் உருவம் யாது?
----------------------------------------

♦ **பிரித்தானியாவிலிருந்து புறப்பட்ட விமானம் துபாயில் சிறிது நேரம திரித்து நின்று மீண்டும் புறப்பட்டு கொழும்பை வந்தடைந்தது.**

விமானம் பயணித்த நேரங்களை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.


| பிரித்தானியா | துபாய் | கொழும்பு | வேறு குறிப்பு |
|---|---|---|---|
| 11:25 | 17:40<br>18:10 | 22:55 | செல்லுகை<br>வருகை |


51.விமானம் பிரித்தானியாவில் இருந்து புறப்பட்டு துபாயை வந்தடைய எடுத்த காலம் எவ்வளவு?
----------------------------------------

52.விமானம் பிரித்தானியாவிலிருந்து கொழும்பை வந்தடைய எடுத்த காலம் எவ்வளவு?
----------------------------------------

53.இனிப்பு ஒன்றின் விலை ரூபா 3.75 ஆகும். அவ்வாறான 4 இனிப்புக்களின் விலை யாது?
----------------------------------------

54.கழிக்குக. $\frac{3}{4} - \frac{1}{3} =$ ..........................................

55.

எட்டு மணிக்கு 20 நிமிடங்கள் என்பதை இக்கடிகார முகத்தில் முட்களை வரைந்து காட்டுக.




56.உருவில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?
----------------------------------------

57. உருவின் நிழற்றப்படாத பகுதியின் சுற்றளவு யாது?
----------------------------------------

♦ பின்வரும் பந்தியை வாசிக்க

இருண்டஒரு பெரிய காடு இருந்தது. அங்கே ஒரு மரக்கிளையின் மேலிருந்து ஒரு குருவி தலையை அசைந்து சுற்றும் முற்றும் பார்த்தது. ஆயினும் தனக்கு ஆபத்து எனக் கருதும் எதனையும் அக்குருவி காண வில்லை. அக்குருவி பார்க்காத ஒரு பக்கமும் இருந்தது. அது சிறிதேனும் அப் பக்கத்தைப் பார்த்திருந்தால்..........................................

(இதனைப் பூரணப்படுத்தி ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கி யத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற வேண்டும் இவ்வாக் கியங்களில் எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக இருக்க வேண்டும்.

58.----------------------------------------
59.----------------------------------------
60.----------------------------------------
61.----------------------------------------
62.----------------------------------------
63.----------------------------------------

# முகாம்களிலுள்ள தமிழ்மக்கள் போர்க்குற்றவாளிகள் போன்றே அதிகாரிகளால் நடத்தப்படுகின்றனர்

## மனித உரிமைகள் ஆர்வலர் நிமல்கா பெர்னாண்டோ

(கொழும்பு)

வன்னியில் அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளம் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள், கொடூரங் களை தமிழ்நாட்டில் இருந்து வெளியாகும் ஆங்கில நாளேடான ''இந்தியன் எக்ஸ் பிரஸ்'' வெளியிட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த மனித உரிமை கள் ஆர்வலரும் வழக்கறிஞருமான நிமல்கா பெர்னாண்டோ இந்த விடயத்தை ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' நாளேட்டுக்கு தெரிவித்துள்ளார்.

மதுரையில் உள்ள இலங்கைத் தமிழர் களின் அகதிமுகாமுக்கு கடந்த வியாழக் கிழமை சென்று அங்குள்ளவர்களைச் சந்தித்துப் பேசிய பின்னர் நிமல்கா பெர்ணா ண்டோ, '' இந்தியன் எக்ஸ்பிரஸ்'' நாளேட் டுக்கு இலங்கை நிலைவரம் குறித்து நேர் காணல் வழங்கினார்.

அதில் அவர் கூறிய முக்கிய விபரங்கள் வருமாறு, முகாம்களில் உள்ள மக்கள் வரும் போது எந்த உடையை உடுத்தியிருந்தார் களோ அதனையே அவர்கள் தொடர்ந்தும் அணிந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழர்கள் போரால் பாதிக்கப்பட்டவர்கள் போன்று நடத்தப்படவில்லை.பதிலாக அவர் கள் போர்க் குற்றவாளிகள் போன்றே அதிகாரிகளால் நடத்தப்படுகிறார்கள்.

சாதாரண பொதுமக்களே இத்தனை அவலங்களைச் சந்திக்கும்போது விடுத லைப்புலி உறுப்பினர்கள் எப்படி நடத்தப்படு வார்கள் என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. அவர்களில் ஊனமுற்றவர் களும் இருக்கிறார்கள்.அவர்கள் அனை வரும் சிறப்பு அகதிமுகாம்களில் அடைக் கப்பட்டுள்ளார்கள்.

போரின் போதுதான் குண்டுத் தாக்குதல் நடத்தி அழித்த பகுதிகள் அனைத்தையும் தெளிவாக அடையாளங்கள் இன்றி அரசு துடைத்தழித்து விட்டது.

அங்கு இருந்த உடலங்கள் அனைத்தை யும் கடலில் வீசி போர்க் குற்றங்களுக்கான தடயங்களையும் மறைத்துவிட்டார்கள் என்றார் நிமல்கா பெர்னாண்டோ.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்புவதில் கண்ணிவெடி ஆபத்து இருக்கிறது என அரசு கூறிவருவது குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர்,

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து தடுப்பு முகாம்க ளுக்கு அந்த மக்களால் மிதிவெடிகள், கண்ணி வெடிகளின் ஆபத்து இன்றி வர முடிந்தி ருக்கிறது என்றால் அதே பாதை வழியாக அவர்களால் ஏன் வீடுகளுக்குத் திரும்பிச் செல்ல முடியாது என்று கேள்வி எழுப்பி னார். (6)

# புலமைப்பரிசில் வழிகாட்டல் பயிற்சிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மத்தி மேம்பாட்டுக் கழகத்தி னால் காரைநகர் பாலர் பாடசாலை மாண வர்களிற்கான புலமைப்பரிசில் வழிகாட்டல் பயிற்சிப் பரீட்சை இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள் ளது.

தரம் 04, தரம் 05 வகுப்பு மாணவர்களிற் கான இப் பயிற்சிப் பரீட்சைக்கு யா/கலாநிதி தியாகராஜ மத்திய மகா வித்தியாலயத்தில் கனிஷ்ட பாடசாலையில் தரம் 05 இற்கும், யா/ யாழ்ற்ரன் கல்லூரியில் தரம்04 இற்கும், காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியா சாலையில் தரம் 04,05 ஆகியனவற்றிற்கும் ஊரி அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 04,05 இற்கும் பரீட்சை மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பரீட்சைத் தினத்தன்று உரிய நேரத்திற்கு மாணவர்களை சமுகமளிக்குமாறு கழகத் தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஓ-246)

# இந்தியாவுக்கு செல்வதை தவிர்க்குமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தல்

(கொழும்பு)

இந்தியாவில் பன்றிக் காய்ச்சல் வேகமாக பரவி வருவதால் அந்த நாட்டுக்கான அத்தி யாவசியப் பிரயாணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இலங்கையில் பன்றிக் காய்ச்சல் தொற் றிய பலர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இக்காய்ச்சலை மேலும் பரவாமல் தடுக்க சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப் புப் பிரிவினர் தீவிர தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தியாவிற்கான அநாவசிய பயணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (6)

# கோட்டை புகையிரத நிலையத்தில் வைத்து இந்துமத குரு குடும்பத்துடன் கைது

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் இருந்து புகையிரதத்தில் கொழும்பு சென்ற இந்துமத குரு குடும்பம் கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள் ளன.


இதில் இந்துமதகுரு சி. வசந்தகுமார சர்மா (வயது 42), அவரது மனைவி குகராணி (வயது 40), மகன் ஹம்சப்பிரசாத் (வயது 5) ஆகி யோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

வவுனியாவிலிருந்து கடந்த வெள்ளிக் கிழமை இரவு 10 மணிக்கு புகையிரதத்தில் கொழும்பு சென்ற மேற்படி இந்து மத குருவின் குடும்பம் சனிக்கிழமை காலை 5 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளது. (6)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

112



னின் பாவங்களைக் கழுவுவார் என்ற கருத் துக்களை ஏற்க மறுத் தார். ஆகவே அவர் இஸ்லாத்தைத் தழுவி னார். அவரது நம்பிக் கைகளுடன் இஸ்லாத் தின் நடைமுறைகள் ஒத்துப்போயின.

அக்குமுவுக்கும் அவருக்கும் அடிக்கடி பல பிரச்சினைகள் எழுந்தன. அவரின் கடும் போக்கே எல்லா வற்றுக்கும் காரணம். பாட்டி ஒன்யாங்கோ வுடன் வாழ்க்கைநடத்தி வந்தபோது, அக்குமு ஒன்யாங்கோவுக்கு இரண்டு குழந்தை களைப் பெற்றெடுத் திருந்தாள்.முதலாவது சரா. இரண்டாவது ஒபாமாவின் தந்தை பரக். அவன் சரா பிறந்து மூன்று வருடங்களின் பின் பிறந்தான்.

அக்குமுவும் பிள்ளைகளும் ஹெலிமா வுடன் கெண்டுவில் வாழ்ந்தபடியால் பாட் டிக்கு அவளைத் தெரியாது.அந்தக் காலத் தில் பாட்டி தன் கணவர் ஒன்யாங்கோவோடு நைரோபியில் வாழ்ந்தாள். அங்கிருந்து கெண்டுவுக்கு போகும்போதெல்லாம் அக் குமுவின் வேதனையைப் பாட்டி அவதானிக் கத் தவறவில்லை. அவள் எதிர்ப்புக் காட்டிக் கொண்டேயிருந்தாள். அவளுக்கு ஒன் யாங்கோ கட்டளை யிட்டுக் கொண்டேயிருந் தார். அவளுக்கு வீடு நடத்தத் தெரியாது என்பார். குழந்தை வளர்ப்பிலும் தலை யிட்டு,குழந்தைகளை தொட்டிலில் போட்டு வளர்க்கும்படியும் தான் நைரோபியிலிருந்து கொண்டு வந்துள்ள வினோத ஆடைகளை குழந்தைகளுக்கு அணியுமாறும் வற்புறுத் துவார்.

குழந்தைகள் தொட்டதெல்லாம் முன்னரி லும் பார்க்க சுத்தமாக்கப்பட்டிருத்தல் வேண் டும். ஹெலிமா அக்குமுவுக்கு உதவினாள். தன்னாலான வரை குழந்தைகளைத் தன்னு டையவையாகவே வளர்த்தாள். இதுகூட அக் குமுவின் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை. அவளுக்கு ஏற்பட்ட அழுத் தம் அதிகமாயிற்று.

ஒன்யாங்கோவை விட்டு விலக பல முறை முயன்றாள். சரா பிறந்த பின்பும், மீண்டும் பரக் பிறந்த பின்பும் அவள் முயற்சித்தாள். இரண்டு தடவைகளிலும் ஒன்யாங்கோ தன் கர்வத்தை மறைத்துக் கொண்டு குழந்தைகளுக்காக அவளைத் தேடி அக்குமுவின் பெற்றோரிடம் சென்று அவர்களின் ஆதரவுடன், திரும்பவும் கூட்டிக் கொண்டு வந்தார்.

இரண்டு தடவைகளிலும் அக்குமுவின் குடும்பம் ஒன்யாங்கோ பக்கம் நின்றபடியால் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. திரும்பியவள் கணவனின் கட்டளைகளுக்கு பயந்து பணியக் கற்றுக்கொண்டாள். ஆயி னும் அவள் அனுபவித்த துன்பங்களை அவ ளால் மறப்பதற்கில்லை.

இரண்டாம் உலகப் போர் ஆரம்பமானதும் அக்குமுவின் வாழ்க்கை பிரகாசமடையத் தொடங்கியது. தாத்தா ஒன்யாங்கோ பிரித் தானியத் தளபதி ஒருவனுக்கு சமையற்கார னாக வெளிநாடு சென்றுவிட்டார். பாட்டி அக் குமுவுடனும், ஹெலிமாவுடனும் சேர்ந்து வாழ்ந்து வந்தாள். ஒன்யாங்கோவை சில காலம் காண்முடியவில்லை.அவர் பிரித்தானி யப் படைப் பிரிவொன்றுடன் பர்மா, சிலோன், அரேபியா, ஐரோப்பா என்று பல நாடு களுக்குப் பிரயாணம் செய்தார்.

மூன்றாண்டுகளின் பின் கிராமப் போன், பர்மாவில் தான் வரித்துக் கொண்ட பெண்ணின் படம் ஆகியவற்றுடன் ஒன்யாங் கோ வீடு வந்து சேர்ந்தார். சுவரில் மாட்டப்பட்டி ருந்த போட்டோக்கள் எல்லாம் அக்காலக் கட் டத்தில் எடுக்கப்பட்டன. அவற்றைத் தான் ஒபாமா அன்று கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்.

ஒன்யாங்கோவுக்கு இப்போது ஐம்பது வயதாகிறது.(1895-1945) வெள்ளையர்க ளுக்காக உழைப்பதை விடுத்து விவசாயத்தி லீடுபட வேண்டும் என்று கருதினார். கெண்டு வில் நிலம் மக்கள் குடியேற்றத்தாலும் மந்தை களின் மேய்ச்சலாலும் களையிழந்து வளம் குன்றிவிட்டது.ஆகவே அலேகோவில் தன் தாத்தாவின் நிலம் தரிசாகக் கிடக்கிறது. அதை உழுது பண்படுத்த எண்ணி அங்கு குடும் பத்தோடு குடியேறத் தீர்மானித்தார். மனைவி மார்களை ஆயத்தமாகும்படி பணித்தார்.

ஒன்யாங்கோவுக்கு வீரம்,பலம், ஒழுக்கக் கட்டுப்பாடு என்றால் நன்றாகப் பிடிக்கும். அவற்றை நன்கு மதித்தார்.

வெள்ளையர்களிடமிருந்து அவர்களின் வாழ்க்கைமுறைகளை நன்கு கற்றாரா யினும் தனது லூவோ பாரம்பரியத்தை காப்ப தில் மிகவும் கவனமாகவிருந்தார். முதி யோரை மதித்தல்,அதிகாரத்தை மதித்தல், தனது எல்லா விடயங்களிலும் ஒழுங்குமுறை, வழக்கம் ஆகியவற்றைப் பேணல் என பல நற்பண்புகள் காணப்பட்டன.

ஆகையினால்தான் என்னவோ கிறிஸ் தவ மதத்தை புறந்தள்ளினார்.சில காலம் தனது பெயரை ஜோண்சன் என்று மாற்றி கிறிஸ்தவனாகி இருந்தார். பகைவர்களுக்கும் கருணை காட்டல்,ஜீசஸ் என்றவர் மனித

### ஐம்பொன்

மனைவிமார்களில் பாட்டி தான் இளைய வள். அவளால் ஏங்கும் எதையும் சமாளிக்கும் வல்லமை இருந்தது.ஆனால் அக்குமுவுக்கும் ஹெலிமாவுக்கும் இச் செய்தி அதிர்ச்சியை யளித்தது.அவர்களின் பெற்றோர்களும் நெருங்கிய உறவினர்களும் கெண்டுவில் வாழ்ந்தபடியால் அவர்களை விட்டு தூர இடத் துக்குப் போகப் பயந்தார்கள்.ஹெலிமா ஒன் யாங்கோவின் வயதை ஒத்தவள். அவளுக்கு குழந்தைகள் இல்லை. ஆகவே அவள் தான் அலேகோவுக்கு போக மறுத்தாள்.அவளைத் தொடர்ந்து அக்குமுவும் மறுத்துவிட்டாள். ஆனால் அவளின் குடும்பத்தினரின் வற்புறுத் தல் காரணமாகத் தன் கணவனையும் குழந் தைகளையும் கவனிப்பது தன் கடமை என்று உணர்ந்து அலேகோவுக்குப் போக ஒருப்பட் டாள்.

(தொடரும்)

# ஊடகங்கள் மீதான கெடுபிடிகளால் மக்களின் தகவல் உரிமை அபகரிப்பு

## சர்வதேச மன்னிப்புச் சபை

(கொழும்பு)

இலங்கையில் ஊடக வியலாளர்கள் மீதான தாக்குதல்கள் , அச்சுறுத்தல்கள் மற்றும் செய்திஅறிக்கையிடல் அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் என்பவற்றின் காரணமாக யுத்தத்தினால் இடம்பெயர்ந்த பொதுமக்களின் பாதுகாப்புக்கும் கௌரவத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

என சர்வதேச மன்னிப்புச்சபை கூறியுள்ளது.

இது தொடர்பாக மன்னிப்புச் சபை விடுத்துள்ள அறிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் கடைசிக்கட்டம் குறித்த செய்திகளை வெளியிடுவதை இலங்கை அரசாங்கம் இடையூறு செய்தது. பொதுமக்கள் ஆட்லறித்தாக்குதலுக்கு உட்பட்டனர்.

இரு தரப்பினர் மீதும் யுத்தக்குற்றங்கள் சுமத்தப்பட்டன. ஆயிரக்கணக்கான இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களுக்கு ஊடகவியலாளர்களும் ஊடக உழியர்களும் கட்டுப்பாடு இன்றி சென்றுவருவதை அரசாங்கம் தொடர்ந்தும் நிராகரிக்கிறது .

இதனால் அம் மக்களின் யுத்த அனுபவங்கள் முகாம்களின் நிலைமைகள் குறித்து செய்தி அறிக்கையிடல் தடுக்கப்படுகிறது.

அதேவேளை தீவிரமான அறிக்கை யிடல்களை மேற்கொண்ட ஊடக ஊழியர்கள் மீதான தாக்குதல்கள் முன்னெப்போதும் இல்லாத அளவு அதிகரித்தமையும் அச்சம் மற்றும் சுய தணிக்கை என்பவற்றிற்கு வழி வகுத்தது . அது இலங்கை மக்களின் தகவல் உரிமையை அபகரித்தது

ஆனால் யுத்தம் தீவிரமடைந்ததையடுத்து ஊடகவியலாளர் மீதான அழுத்தங்களும் அதிகரித்தன. யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் அரசாங்கம் கட்டுப்பாடுகளை இறுக்கியது.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் அனுமதி இன்றி யுத்தம் குறித்து எழுதுவது ஊடகவியலாளர்களை அபயாத்திற்குள்ளாக்கியது ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவது , அச்சுறுத்தப்படுவது, கடத்தப்படுவது காணாமல் போவது போன்றவை அனைத்தும் இந்த எல்லைகள் மீற முயன்றவர்களுக்கே நேர்ந்தது.

தண்டனை குறித்த பயம் இன்றிய கலாசாரம் காரணமாக ஊடகவியலாளர்களுக்கும் ஊடகத்துறைக்கும் எதிரான அச்சுறுத்தல்கள் தொந்தரவுகள் அதிகரித்தமை செய்தி அறிக்கையிடலை மழுங்கடித்துள்ளன.

இலங்கை ஊடகவியலாளர்கள் மீது மட்டுமல்ல வெளிநாட்டு நிருபர்களும் அவர்களின் செய்திகள் அரசாங்கத்தைப் பாதித்ததன் காரணமாக விசா நிராகரிக்கப்பட்டமை நாடு கடத்தப்பட்டமை போன்றவற்றுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

புலிக்ளின் கட்டுப்பாட்டில் இருந்து யுத்த வலயத்தில் இருந்த பொதுமக்களின் எண்ணிக்கை தொடர்பாக அரசாங்கமும் புலிகளும் திரிவுபடுத்தப்பட்ட எண்ணிக்கைகளை வெளியிட்டனர்.

வன்னியில் 4 இலட்சம் மக்கள் இருப்பதாக புலிகள் கூறினர். அங்கு ஒரு இலட்சத்து 20ஆயிரம் பேரே இருப்பதாக அரசாங்கம் கூறியது. அது தொடர்பான சுயாதீன உறுதிப்படுத்தல்கள் இல்லை. செய்தியாளர்கள் இல்லை. ஊடகங்கள் அனுமதிக்கப்படவில்லை. அரசாங்கம் மக்களை வரவேற்பதா கக் கூறியது. இறுதியில் சுமார் 3 இல்ட்சம் மக்கள் வந்தனர். பொதுமக்கள் வந்தபோது அங்கு தேவையான வசதிகள் இருக்க வில்லை. தற்போது யுத்தம் முடிந்து 3 மாதங் கள் கடந்த பின்னரும் முகாம்களில் உள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகள் கூட கிடைக்கவில்லை. ஏனெனில் தகவல் சுதந்திரம் இல்லை அங்கு எவ்வளவு மக்கள் இருக்கிறார்கள் என்ன நிலைமையில் இருக்கிறார்கள் என்பது குறித்து ஊடகவியலாளர்கள் செய்தி அறிக்கையிட முடியாது.

முகாம்களுக்கு செல்வதற்கு அங்குள்ளோரைச் சந்திப்பதற்கான கட்டுப்பாடுகள் உள்ளநிலையில் சகலவிதமானமனித உரிமை மீறல்களும் அதிகாரிகளால் புறக் கணிக்கப்படுவதற்கான சாத்தியத்தைக் கொண்டிருக்கின்றன.

முகாம்களில் உள்ள சிறு பாராயத்தினர் பெண்கள் முதியவர்கள் அங்கவீனமுற்றோர் போன்று அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீது துஷ்பிரயோகங்கள் இடம்பெறும் சாத்தியம் கவலையளிப்பதாகும். (6)

## வவுனியாவில் பெரும்பாலான சோதனைச்சாவடிகள் அகற்றம்

(கொழும்பு)

வவுனியா நகரத்திலும் எல்லைப்புறங்களிலும் இருந்த பெரும்பாலான வீதிச் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டு விட்டதாக வவுனியா பிரதிப்பொலிஸ்மா அதிபர் ரவி. விஜயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மக்களின் போக்குவரத்து வசதிகளை கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்தார். பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி குணவர்த்தன கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மாத்திரமே சோதனைச் சாவடிகள் தொடந்து இயங்கி வருவதாகவும் குறிப்பிட்டார்.

வவுனியாவில் கப்பம் பெறுவோர் குறித்து கண்காணித்து வருவதாகவும் கப்பம் பெறுவோருக்கு எதிராக கடும் நட வடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் கப்பம் கோருவோர் குறித்து உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார். (6)

## ஐ.தே.க. பிரதேச அரசியல் கட்சியாக விரைவில் மாறும்

### அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி விரைவில் பிரதேச அரசியல் கட்சியாக மாறும் என்பது நடந்து முடிந்த 3 தேர்தல் பெறுபேறுகளின் மூலமாக தெளிவாகியுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அனுரபிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு முடிவுகளை அறிவித்துவிட்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்லுடன் 2009 ஆம் ஆண்டு தேர்தல்களை ஒப்பிட்டுப்பார்த்தால் பாரிய வித்தியாசம் நிலவுகின்றது.

ஊவா மாகாண சபைத்தேர்தலில் பதுளை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி 56 , 45 வீதம் விழ்ச்சி யடைந்துள்ளதுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 34 வீதம் வளர்ச்சி யடைந்துள்ளது.

மொனராகலையில் 66. 93 வீதம் வீழ்ச்சி யடைந்துள்ளதுடன் எமது முன்னணி 36 வீதம் வளர்ச்சியடைந்துள்ளது.

அரசியல் சித்திரத்தில் பல்வேறான மாறுதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக் கின்றன. யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய தேசி யக்கட்சி 83 வாக்குகளைப் பெற்றுள்ளதுடன் ஐ. தே. க பெற்ற வாக்கு தொடரில் வவுனியா நகர சபைத்தேர்தலில் எவ்விதமான பதிவுமே இல்லை. இது அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைமையை இப்போதே வெளிப்படுத்திவிட்டது.

இவ்வாறானதொரு நிலைமையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி விரைவில் பிரதேச அரசியல் கட்சியாக மாறும் என்பது தெளிவாகின்றது என்றார். (6)

## ஹஜ் யாத்திரை செல்ல புதிய கட்டுப்பாடு

### சவூதி அரசு விதிப்பு


உலக நாடுகளில் பன்றிக்காய்ச்சல் பரவி வருவதால் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு வருகை தரும் யாத்திரிகர் தொடர்பில் சவூதி அரேபிய அரசாங்கம் புதிய அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது.

அதன்படி 12 வயதுக்குக் குறைவானவர்களும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களும் கர்ப்பிணித் தாய்மாரும் ஹஜ் யாத்திரை மேற்கொள்வதைத் தவிர்த்துக்கொள்வது ஏற்றதாகும் என சவூதி ஆரேபிய அரசாங்கம் அறிவித்துள்ளதாக முஸ்லிம் சமய கலாசார திணைக் களப் பணிப்பாளர் வை. எல். எம். நவாவி தெரிவித்துள்ளார்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் பரவி வரும் புதிய எச்–1 என் –1 வைரஸ் காய்ச்சல் காரணமாகவே சவூதி அரேபிய சுகாதார அமைச்சு புதிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும் இது கட்டுப்பாடோ தடையோ அல்ல எனவும் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இது தவிர இருதய நோயாளிகள் சிறுநீரக கோளாறு மற்றும் நீரிழிவு நோயாளிகள் போன்றோரும் ஹஜ் கடமையை நிறைவேற்ற வருவதைத் தவிர்க்குமாறும் சவூதி அரேபிய அரசு அறிவித்துள்ளது. (6)

## கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம்



(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

மேற்படி கல்லூரியின் மேம்பாட்டு நடவடிக்கைகள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தேவைகள் , குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகள். போன்றவற்றைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளை மேற்கொள்ளும் முகமாகவே அமைச்சரின் இவ் விஜயம் அமைந்திருந்தது.

இதன் போது இக்கல்லூரியில் கற்கை நெறிகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்த அமைச்சர் , நிர்வாகத் தரப்புடன் கலந்துரையாடி அக் கோரிக்கைகளை தீர்த்து வைத்ததுடன் முஸ்லிம் மாணவர்களது நோன்பு கார விடுமுறை தொடர்பிலான பிரச்சினைக்குரிய தரப்புக்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தீர்வினைப்பெற்றுக்கொடுத்தார்.

சுமுகமான முறையில் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து தங்களது கற்கை நெறிகளை பூர்த்தி செய்து இம் மாணவர்கள் எமது சமூதாயத்திற்கு நல்லதொரு சேவையை மேற்கொள்ள முன் வரவேண்டி யதன் அவசியத்தை இங்கு வலியுறுத்திக் கூறிய அமைச்சர் டக்ளஸ்தேவானந்த ,கல்லூரி நிர்வாகத்தை மாணவர்கள் மதித்து நடக்க வேண்டிய அதே சமயம் மாணவர்க ளையும் நிர்வாகம் மதிப்புடன் நடாத்த வேண்டும் என்பதையும் உணர்த்தினார்.

எதிர்கால சமூதாயத்திற்கு முன்னோடிகளாக உருவாக்கவேண்டிய நிலையில் இம் மாணவர்களது மேம்பாடு கருதி இக்கல்லூரியின் தேவைகளைப் படிப்படையாக பூர்த்தி செய்து தருவதாக [illegible] டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்த[illegible] (6)

## வடமாகாணத்திலுள்ள 400 கிராமங்களுக்கு மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

“வடக்கின் வசந்தம்” வேலைத்திட்டத்தில் வடமாகாணத்தில் 400 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் மேலதிக பொதுமுகாமையாளர் எஸ்.சொய்சா தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் வட மாகாண உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.முத்துரட்ணானந்தம் தலைமையில் சுன்னாகம் பிரதேச பொறியியலாளர் பணிமனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (6)

இலட்சியத்தை அடைய கடக்க வேண்டிய தூரத்தைப்பற்றிய கவலை இல்லை. ஆனால் அதை நோக்கி முதல் அடி எடுத்து வைப்பதுதான் கடினமானது. -டூ மார்க்வஸ் டெஃபோண்ட்

வலம்புரி

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மண்டைதீவுக்கு விஜயம் செய்ய வேண்டும்

யாழ். நகரத்திற்கு மிக அண்மித்த ஊர் மண்டைதீவு. சுமார் 7 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் இந்த ஊரின் இரு பிரதான தொழில் முயற்சியாக விவசாயமும், கடற்றொழிலும் அமைந்துள்ளன.

1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஏற்பட்ட படைநடவடிக்கை பின்னர் 1991ஆம் ஆண்டில் நடந்த படைநடவடிக்கை காரணமாக மண்டைதீவை விட்டு மக்கள் வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

நான்கு புறம் கடல்-இயற்கையாக அமைந்த கடல் நிலக்காடு, தூய்மையான காற்று, வயல் ஒரு புறம், பயிர்செய் நிலம் ஒரு புறம், குடிமனைகள் ஒரு புறம் என எல்லாமே ஒழுங்கமைக்கப்பட்டவாறான மண்டைதீவு இன்று கவனிப்பார் அற்ற ஊராக மாறிவிட்டது.

மண்டைதீவின் மேற்திசையில் அமைந்த கடல் நீரை தடுக்கும் அணை உடைந்து பல வருடங்கள் கடந்து விட்டன.

இது பற்றி பல தடவைகள் இவ்விடத்தில் எழுதியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. யார் எந்தக் காரணம் கூறினாலும் அணைக்கட்டை திருத்தி அமைப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் கரிசினை கொள்ளவில்லை என்பதே சத்தியமான உண்மை.

உடைந்து போயுள்ள கடல் நீர் தடுப்பணையை திருத்தி அமைக்காமையால் கடல் நீர், வயல் நிலங்களை ஆக்கிரமித்து நெல் விளையும் பூமியை உவர் விளையும் மண்ணாக நாசம் செய்துள்ளது.

1990ஆம் ஆண்டுக்கு முன்னர் நெல் விளைந்த மண் இன்று வானம் பார்த்த பூமியாகக் காய்கிறது. சுமார் 19 வருடங்கள் நீடிக்கும் இந்தப் பரிதாபம் கண்டு நெஞ்சம் நெருப்பாக-அதனை அணைக்க கண்கள் குளமாக இதுதான் தலைவிதி என்ற நினைப்போடு தமிழ் மானிட வாழ்வென... வாழ்வென... நொந்து கொள்வதைத் தவிர வேறு வழி ஏதும் இல்லை.

எதுவாயினும் நெல் விதைப்பில் ஊரெல்லாம் உசார் அடைந்திருக்கும் போது மண்டைதீவு வயல்கள் மட்டும் சபிக்கப்பட்டவைகளாக உழவின்றி, உரம் இன்றி, நெல் விதைப் பின்றி இருப்பதைத் தடுக்க சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மண்டைதீவுக்கு விஜயம் செய்ய வேண்டும். அங்குள்ள மக்களை சந்திக்க வேண்டும்.

இதுவரை அந்த மக்களுக்குக் கிடைத்தவை எவை என்பதை ஆராய வேண்டும். இது காலத்தின் அவசர தேவையாகும்.

# இந்து சமய விரதங்களும் நவக்கிரக வழிபாடும்




நூல் விமர்சனம்

கொக்குவில், சோதிட பரிபாலன மடம் இ.வெங்கடேசஐயரால் வெளியிடப்பட்ட ஏழாலை அம்பலவாணர் சிற்சபேசலிங்கம் தொகுத்த இந்து சமய விரதங்களும் நவக்கிரக வழிபாடும் என்ற நூல் இந்து சமயிகள் யாவருக்கும் மிகவும் பயனுள்ள நூலாகும்.

இந்நூலில் இந்து சமயிகள் விரதம் அனுஷ்டிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய அனுஷ்டானங்கள், விரதங்கள் சேர்ந்து வரும்போது அவை எப்படி அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்னும் விபரங் கள் பற்றி எடுத்தியம்பப்பட்டுள்ளன.

அத்துடன் விநாயகர், மாதா, சிவன், தேவி, சுப்பிர மணியர், வைரவர் ,வீரபத்திரர் ,ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆகிய தெய்வங்களுக்கான விரதங்கள் அனுஷ்டிக்கும் முறை, படிக்கவேண்டிய தேவாரங்கள் மற்றும் பாடல்கள் என்பவற்றுடன் வைஷ்ணவ விரதங்கள் பற்றியும் கூறப்பட் டுள்ளது.

மேலும் மாதம் தோறும் அனுஷ்டிக்கும் விரதங்கள் பற்றியும் நவக்கிரக தோஷ வழிபாடுகள், நிவர்த்திகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இந்நூல் அனைத்து இந்து சமயிகளும் பயன்படுத்தக் கூடிய நூல் என்றால் மிகையாகாது.

# வெறுமனே பேச்சுக்களை நடத்தாது அமெரிக்கா இலங்கைக்கு உதவவேண்டும்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

வெறுமனே பேச்சுக்கள் நடத்திக் கொண்டிருக்காமல் இடம்பெயர்ந்து மக்களை மீள் குடியேற்ற இலங்கை அரசாங்கம் வேலைத்திட்டங்களுக்கு அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகம் ஒத்துழைப்புக்களை வழங்க முன் வரவேண்டும் என்று இடமுகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் தேசிய அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பிலான யோசனைகள் அரசியல் கட்சிகளினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

எவ்வாறான முறைமையில் நல்லிணக்க முறைமையை உருவாக்குவது என்பது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் வசிக்கும் புலம் பெயர் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளை மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலர் றொபட்ஓ பிளேக் அண்மையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதன் போது இலங்கையின் வடக்குப்பகுதியில் இடம்பெயர்ந்தவர்களை விரைவில் மீள் குடியேற்ற வேண்டும் என்றும் அவர்களைச் சுதந்திரமாக நடமாட விட வேண்டும் என்றும் தேசிய நல்லிணக்க வேலைத்திட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் மேலும் கூறியதாவது வெறுமனே பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டிருக்காமல் இடம்பெயர்ந்துள்ள மக்களை விரைவில் மீள் குடியேற்றும் எமது வேலைத்திட்டத்திற்கு சர்வதேச நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் முக்கியமாக அமெரிக்கா இலங்கைக்கு உதவி வழங்க வேண்டும் விடயங்கள் தொடர்பில் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதை நிறுத்தி விட்டு ஒத்துழைப்பு வழங்க முன் வரவேண்டும் .ஏற்கனவே பல நாடுகள் எமது வேலைத் திட்டத்திற்கு உதவிகளை வழங்கி வருகின்றன.

இடம்பெயர்ந்துள்ள மக்களை வெகு விரைவில் மீள் குடியேற்ற வேண்டும் என்பதே இலங்கை அரசாங்கத்தினது விருப்பமாகும். அதற்காகத்தான் பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.

இவ்வருட இறுதிக்குள் பெரும்பாலான மக்களை மீள் குடியேற்றி விடுவோம் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. அம் மக்களை சகல உட்கட்டமைப்பு வசதிகளுடனும் மீள் குடியேற்ற வேண்டியுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேசிய அரசியல் நல்லிணக்க வேலைத்திட்டம் என்பது மிக முக்கியமான விடயமாக நாங்கள் நோக்குகின்றோம் . நாடளாவிய ரீதியில் தேசிய நல்லிணக்க வேலைத்திட்டங்களை நாங்கள் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

தேசிய அரசியல் நல்லிணக்க வேலைத்திட்டமானது நேரடியாக ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலி லேயே நடைபெறும் .

தற்போதைய நிலைமையில் தேசிய நல்லி ணக்க வேலைத்திட்டத்திற்கான யோசனைகளை அரசியல் கட்சிகள் ஜனாதிபதியிடம் ஒப்படைத்து வருகின்றன. அந்த யோசனைகளைக்கொண்டு எவ்வாறான நல்லிணக்க முறை மையை தயாரிப்பது என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வரு கின்றது என்றார். (6)

# இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் போர் முடிபுக்கு வந்துள்ளதை அடுத்து சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு ஜுலை மாதம் வந்திருந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைவிட இந்த ஆண்டு ஜுலை மாதம் வருகை தந்தவர்களின் எண்ணிக்கை 28 வீதத்தினால் அதிகரித்துள்ளது என சுற்றுலாத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் அறிக்கைப்படி கடந்த ஜுலை மாதம் மட்டும் 42 ஆயிரத்து 223 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு இதே மாதத்தில் 32 ஆயிரத்து 982 சுற்றுலாப் பயணிகளே வந் திருந்தார்கள்.

30 ஆண்டு காலப் போர் முடிபுக்கு வந்துவிட்டதைத் தொடர்ந்து உலகின் எல்லாப் பாகங்களில் இருந்தும் பயணிகள் வருகிறார்கள். ஓய்வுக்கும் சொகுசுக்குமான சிறந்த சுற்றுலா இடமாக இலங்கை இப்போது மாறத் தொடங்கி விட்டது என்று அரச தகவல் திணைக்களம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.


இருந்தாலும் இந்த ஆண்டில் இதுவரை வந்திருக்கக் கூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் வந்த வர்களை விடவும் 10.6 வீதம் குறைவானதுதான். கடந்த ஆண் டில் வந்திருந்த 2 இலட்சத்து 57ஆயிரத்து 345 பேருக்குப் பதிலாக இந்த ஆண்டில் 2 இலட்சத்து 29 ஆயிரத்து 952 பேரே வந்திருக்கிறார்கள்.

அடுத்த ஆண்டில் 5 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவைப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்கள் மூலமாக 400 மில்லியன் டொலர் வருமானத்தைப் பெறுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-5)

## சுவாமி விவேகானந்தரின் எல்லாவற்றிலும் இறைவனைக் காணலாம்



தரையில் ஊர்ந்து செல்லும் புழு முதல் கொண்டு எல்லோருடைய கண்ணிற்கும் நீல வானம் தெரிகிறது. ஆனால் அது எவ்வளவோ தூரத்தில் இருக்கிறது! நாம் அடைய வேண்டிய இலட்சியமும் அப்படித்தான். அது வெகு தூரத்தில் இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனாலும் அதை நாம் அடைந்தே தீரவேண்டும். ஏன் மிகவும் உயர்ந்த இலட்சியத்தையே நாம் கொள்ள வேண்டும். துரதிஷ்டவசமாக பெரும்பாலானோர் எந்தவொரு இலட் சியமும் இல்லாமல் இருட்டு வாழ்க்கையைத் தான் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். இலட்சியம் உள்ளவன் ஆயிரம் தவறு களைச் செய்வானானால் இலட்சியம் இல்லாதவன் 50ஆயிரம் தவறு கள் செய்வது என்பது நிச்சயம். எனவே ஒரு இலட்சியம் இருப்பது சிறந்தது.



கொமர்ஷல் வங்கியின் 365 நாள் வங்கிச் சேவை நேற்று யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதான இயக்குநர் அதிகாரி ரவிதாஸ் மங்கல விளக்கேற்றுவதையும், யாழ்.பிராந்திய நிலைய சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.ரவீந்திரா, செயற்பாட்டு உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.பண்டாரநாயக்க ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

# நல்லூர் மஹோற்சவ கால நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் சமயச் சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில் இன்று திங்கட்கிழமை நாள் என்செய்யும் வினைதான் என்செய்யும் எனும் விடயம் பற்றி மா.நா.பரமேஸ்வரனின் சிறப்புச்சொற் பொழிவு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து விசேட நிகழ்வாக திருமதி புஸ்பநாதன் யோகேஸ்வரியின் இசைக் கச்சேரியும்,சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள், நல்லூர் சிவசாயி சித்திரகோட்ட, மருதனார் மடம் ஆஞ்சநேயர் ஆகிய அறநெறிப் பாட சாலை மாணவர்களின் கலைநிகழ்வு களும் இடம் பெறவுள்ளது.

✠✠✠

நல்லூர் மஹோற்சவ காலத்தை முன் னிட்டு நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் கான கதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் கம்பராமாயணம் பற்றிய தெய்வீக இசைச் சொற்பொழிவில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ''விபீஷ ணன் சரணாகதி'' எனும் விடயம் பற்றி சொற்பொழிவாற்றவுள்ளார்.

✠✠✠

இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று திங்கட்கிழமை ஆர்.இராதாகிருஷ்ணன், கே.குகபரன், திருமதி ரஜிவி ஜெகன், செல்வி கார்த்திகா யோகராசா ஆகியோரின் வயலின் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இதில் அணிசெய் கலைஞர்களாக மிருதங்கம் எம்.சிதம்பரநாதன், வி.ரமணா, கெஞ்சிரா செல்வன் கே.நந்தகுமார், முகர் சிங் என்.சதீஸ்குமார் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர். (6-4)

# இடம்பெயர்ந்த மக்கள் வெளியேறாதவாறு

## — பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம் —

(கொழும்பு)

வவுனியா ,மன்னார் மற்றும் யாழ்ப் பாணம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட் டுள்ள இடம்பெயர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் சட்டவிரோதமான முறையில் வெளியேறாத வகையில் பாது காப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தப்பிச் செல்ல முற்பட்ட 40 பேரை பொலிஸார் கைது செய்துள்ளதாக சிரேஸ்ட காவல்துறை அதிகாரியொருவர் குறிப் பிட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங் களே முகாம்களிலிருந்து மக்களை இரகசிய மாக வெளியேற்றி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் முகாம்களி லிருந்து எவரேனும் தப்பிச் சென்றுள்ளனரா என்பது குறித்து ஆராயும் நோக்கில் அகதி முகாம்களில் விசேட மதிப்பீட்டு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விரைவில் இந்த மதிப்பீடுகள நிறைவடையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# மேற்குலக நாடுகளுடனான நட்புறவை மீண்டும் வலுப்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

மேற்குலக நாடுகளுடனான நட்புறவை மீண்டும் வலுப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சில மேற்குலக நாடு களுடன் ஏற்பட்ட மனக்கசப்புக்களை களைந் தெறியும் வகையில் விசேட திட்டமொன்றை தாம் முன்னெடுக்கவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மதத் தலைவர்களுடன் இணைந்து விசேட குழுவொன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் இலங்கையின் நற்பெயரை மீளவும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சில மேற்குலக நாடு கள் இலங்கை தொடர்பாக தப்பான அபிப் பிராயத்தை கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டுதலின் பேரில் மேற்குலக நாடுகளுடனான புதிய உறவுகள் ஏற்படுத்திக் கொள்ளப்படும் என வும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க இலங்கை அரசாங்கம் தவறியுள்ளது

## ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தெரிவிப்பு



இலங்கைத் தமிழர்களின் உரிமைக ளைப் பாதுகாப் பதற்கு இலங் கை அரசாங் கம் தவறியுள் ளதென ஜனதா கட்சியின் தலை வர் சுப்பிரமணி யம் சுவாமி தெரிவித்துள் ளார். இலங்கைத் தமிழ் மக்களுக்கு சகல உரிமை களும் வழங்கப் படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்திருந்தார்.

தேர்தல் காலத்தில் மட்டும் தமிழக அரசி யல் கட்சிகள் இலங்கைத் தமிழருக்காக குரல் கொடுத்ததாகவும் தற்போது அவை மௌனம் காத்து வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழர் ஆதரவு கட்சிகளாக தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட பல கட்சிகள் தற்போது மௌனம் காத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு சமவுரிமை கள் வழங்கப்பட வேண்டும் என்பதனை மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் சரியாகப் புரிந்துகொண்டு இலங்கை அரசாங் கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# தூத்துக்குடியில் சிக்கிய அதிசய மீன்



(தூத்துக்குடி)

தூத்துக்குடி மீனவர் ஒருவரின் வலை யில், மனிதர்களின் கை, கால்களைப் போல தோற்றம் கொண்ட துடுப்புகளுடன் அதிசய மீன் சிக்கியது.தூத்துக்குடியைச் சேர்ந்த வர் ராஜா.

கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற அவர், வெள்ளிக்கிழமை மாலை திரேஸ்புரம் கரைக்கு திரும்பினார்.

அவரது வலையில் அதிசய மீன் சிக்கி யது. மனித உருவில் வாய்,மூக்கு என்ப வற்றுடன் முன் துடுப்புக்கள் கைகளைப் போலவும், பின் துடுப்புகள் கால்களைப் போலவும் இருந்தன.

இரண்டு கிலோ எடையுடன் இளஞ் சிவப்பு நிறத்தில் தோலுரிக்கப்பட்டது போலக் காணப் பட்ட அந்த மீன், ஒரு தொட்டி யில் வளர்க் கப்படுகிறது. (6)

## தாய்வானில் நிலச்சரிவு

# 1300 பேர் மண்ணில் புதைந்து உயிருக்குப் போராட்டம்

(சயாக்லின்)

தாய்வான் நாட்டில் கடந்த 8 ஆம் திகதி ஏற்பட்ட கடும் புயல் மற்றும் பலத்த மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டு பல இடங் களில் நிலச்சரிவும் நிகழ்ந்தது.இதனால் ஏராளமான கிராமங்கள் அடியோடு மண் ணில் புதைந்தன. இதில் 123 பேர் பலியா னார்கள்.எங்கு பார்த்தாலும் சேறும் சகதியு மாக இருந்தது. இதற்குள் ஆயிரக்கணக் கானோர் சிக்கிக் கொண்டனர்.

அவர்களை மீட்கும் பணி ஒரு வாரமாக நடந்து வருகிறது.இதுவரை 2518 பேர் மீட்கப் பட்டுள்ளனர்.


இன்னும் 1300க்கும் மேற்பட்டோர் மண்ணில் புதைந்து வெளியே வரமுடியாமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களை மீட்கும் பணியில் அந்நாட்டு இராணுவத்தினர் ஈடு பட்டுள்ளனர். 75 ஹெலிகொப்டரில் சென்று தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள் ளனர். சேற்றில் இறங்கி மீட்பதில் கடும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் விரைவில் அவர்களை மீட்காவிட்டால் உயிரிழக்கும் சூழ்நிலை ஏற் படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# குவைத்தில் திருமண வீட்டில் தீ 36 பேர் கருகிப் பலி; 60 பேர் காயம்


அரபு நாடுகளில் ஒன்றான குவைத்தில் உள்ள அல்ஜகரா நகரத்தில் திருமண விழா ஒன்று நடந்தது. குவைத்தில் திருமண விழா விருந்து நிகழ்ச்சிகள் பெண்களுக்கு தனியாக வும், ஆண்களுக்கு த்னியாகவும் நடை பெறும். இதில் பெண்களுக்கு நடந்த நிகழ்ச் சிக்காக பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. நூற்றுக்கணக்கான பெண்கள், குழந்தைகள் இதில் கலந்து கொண்டனர்.

அப்போது பந்தலில் திடீரென தீப் பிடித்தது. உள்ளே ஏராளமானோர் சிக்கிக் கொண்டனர். இதில் 36 பேர் தீயில் கருகி உயிரிழந்தனர். 60 பேர் காயமடைந்தனர்.

தீ விபத்து ஏற்பட்டதும் அங்கு இருந்த வர்கள் அலறியடித்து ஓடினார்கள். அப்போது நெரிசல் ஏற்பட்டது. இதில் சிக்கிய பலர் மயங்கி விழுந்தனர். அவர்களும் தீயில் கருகிப் பலியானார்கள். (6)







சில்லாலை கதிரை அன்னை ஆலய வருடாந்த திருவிழாவில் திருச்சொரூப பவனி இடம்பெறுவதையும் திருப்பலியை ஆலயப்பங்குத் தந்தை யூட் அமலதாஸ், அலக்சான்டர், சகாயநாதன், போல் ரோகான், எமில் ஆகியோர் நிறைவேற்றுவதையும் கலந்து கொண்ட பக்தர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இரண்டு ஆண்டுகளின் பின் டிராவிட் இந்திய ஒருநாள் அணிக்கு திரும்பினார்



(சென்னை)

இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள முக்கோணத் தொடர் மற்றும் சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கான இந்திய ஒருநாள் அணியில் முன்னாள் தலைவர் ராகுல் டிராவிட் நீண்ட இடை வெளிக்குப் பின்னர் அழைக்கப்பட்டுள்ளார்.

இது தவிர காயம் காரணமாக அண்மையில் நடந்த மேற்கிந்தியத் தீவுகளுடனான ஒரு நாள் தொடரில் விளையாடாத நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதில் நடந்து முடிந்த மேற்கிந்தியத் தீவுகளு டனான ஒருநாள் தொடர் மற்றும் இருபது-20 உலகக் கிண்ண போட்டியில் சோபிக்கத் தவறிய ரோஹித் சர்மா அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இவருக்கு பதிலாகவே ராகுல் டிராவிட் ஒருநாள் அணிக்குத் திரும்பினார்.

டிராவிட் கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்திய ஒருநாள் அணியில் விளையாடவில்லை என்றாலும் அவர் இரண்டாவது ஐ.பி.எல். தொடரில் சிறப்பாக செயற்பட்டதை அடுத்தே அணியில் வாய்ப்பு பெற்றுள்ளார்.

இதேவேளை இந்திய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வீரேந்திர சேவாக் காயம் காரணமாக தொடர்ந்தும் ஒருநாள் அணியில் இடம் பிடிக்கவில்லை என்பதோடு காயத்தினால் அவதிப்பட்டு வரும் வேகப்பந்து வீச்சாளர் சகீர் கானுக்கும் ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

அணி விபரம் வருமாறு;

சச்சின் டெண்டுல்கர், கௌதம் காம்பீர், ராகுல் டிராவிட், சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங், மஹேந்திர சிங் தோனி(தலைவர், விக்கெட் காப்பாளர்), யூசுப் பதான், ஹர்பஜன் சிங், பிரவீன் குமார், இஷாந் சர்மா, அஷிஷ் நெஹரா, ருத்ரபிரதாப் சிங், அமித் மிஷ்ரா, தினேஸ் கார்த்திக், அபிஷேக் நாயர்.

# பெண்கள் டெஸ்ட் போட்டிக்கு ஆபத்து

(புதுடில்லி)

இருபது-20 போட்டிகளின் அசுர வளர்ச்சி காரணமாக பெண்களுக்கான டெஸ்ட் கிரிக்கெட் அழியும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இருபது-20 போட்டிகளின் வரவால் ஆண்களுக்கான டெஸ்ட் போட்டிக்கு மட்டுமல்லாமல், பெண்களுக்கான டெஸ்ட் போட்டிக்கும் பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது. பெண்கள் கிரிக்கெட் அரங்கில் இந்த ஆண்டு ஒரே ஒரு டெஸ்ட் போட்டிதான் நடந்துள்ளது.

கடந்த யூலை மாதம் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் இப்போட்டி நடந்தது. இந்திய பெண்கள் அணி கடைசியாக கடந்த-2006 ல் இங்கிலாந்துக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் பங்கேற்றது.

சமீபகாலமாக இந்திய பெண்கள் அணி ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் மட்டுமே பங்கேற்று வருகிறது. கடந்த 2006-ம் ஆண்டுக்கு பின் இந்திய பெண்கள் அணி 39 ஒருநாள் மற்றும் ஐந்து இருபது-20 போட்டிகளில் மட்டுமே விளையாடியது.

இது குறித்து இந்தியப் பெண்கள் கிரிக்கெட்டின் பிரதிநிதி மற்றும் முன்னாள் அணித் தலைவி சுபங்கி குல்கரணி கூறுகையில்;

கடந்த 2007ஆம் ஆண்டிலிருந்து இந்தியப் பெண்கள் அணி ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறது. இதற்கு தொடர்ச்சியான அட்ட வணை காரணம்.

கடந்த 2007-ம் ஆண்டு நான்கு நாடுகள் பங்கேற்ற ஒரு நாள் தொடர் இந்த ஆண்டு உலகக் கோப்பை (50 ஓவர் மற்றும் இருபது-20) தொடர்களில் பங்கேற்க வேண்டியிருந்ததால் டெஸ்ட் போட்டியில் விளையாடும் வாய்ப்பு குறைந்தது என்றார்.

# டிரினிடாட் அன்ட் டுபாக்கோ அணிக்கு பயிற்சியாளராகிறார் பிரைன் லாரா



(கிங்ஸ்டன்)

டிரினிடாட் அன்ட் டுபாகோ அணிக்கு பயிற்சி அளிக்க உள்ளார் மேற்கிந்தியத் தீவுகள் ஜாம்பவான் பிரைன் லாரா. உள்ளூர் இருபது-20 சம்பியன்கள் பங்கேற்கும் சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் தொடர் எதிர் வரும் ஒக்ரோபர் 8ஆம் திகதி இந்தியாவில் ஆரம்பமாகிறது. இதில் பங்கேற்க உள்ள அணிகளுள் மேற்கிந்திய தீவுகளின் டிரினிடாட் அன்ட் டுபாகோ அணிக்கு முன்னாள் வீரர் பிரைன் லாரா பயிற்சி அளிக்கவுள்ளார். இவர் ஓய்வுக்குப் பின் அங்கீகாரம் இல்லாத ஐ.சி.எல். தொடரில் விளையாடினார். தற்போது மேற்கிந்திய தீவுகளின் கிரிக்கெட் வளர்ச்சிக்கு உதவ முடிபு செய்துள்ளார். இது குறித்து லாரா கூறுகையில்;

டிரினிடாட் அணிக்கு பயிற்சி அளிப்பது குறித்து பேச்சு வார்த்தை நடத்தி வருகிறேன். ஆனால் எதுவும் முடிபு செய்யப் படவில்லை என்றார்.

# ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ்; பெடரர், நடால் அதிர்ச்சித் தோல்வி

(மான்ட்ரியல்)

கனடாவில் நடந்து வரும் ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் பெடரர், நடால் ஆகியோர் அதிர்ச்சி தோல்வி அடைந்தனர்.

ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் போட்டி கனடாவின் மான்ட்ரியல் நகரில் நடந்து வருகிறது. இதில் உலக தரவரிசையில் முதல் 8 இடங்களை வகிக்கும் வீரர்கள் மட்டும் காலிறுதிக்குள் நுழைந்திருந்தனர்.

இந்நிலையில் காலிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடந்தன. இதில் ஒரு ஆட்டத்தில் நம்பர்-1வீரர் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெரர் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். அவரை 7-ம் நிலை வீரர் பிரான்சின் வில்பிரிட் சோங்கா 7:6 (7:5), 1:6, 7:6 (7:3) என்ற செட் கணக்கில் தோற்கடித்தார்.

இந்த மோதலில் கடைசி செட்டில் 1:5 என்று பின்தங்கி இருந்த சோங்கா அதன் பின்னர் ஆச்சரியப்படும் அளவுக்கு முன்னேறி பெடரரின் வெற்றி வாய்ப்பை தகர்த்தார். அத்துடன் பெடரரின் தொடர்ச்சியான 21-வது வெற்றி பயணத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்தார். இந்த ஆட்டம் 2 மணி 19 நிமிடங்கள் நீடித்தது.

இதே போல் உலகின் 2 ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபெல் நடாலும் எதிர்பாராத தோல்வியை சந்தித்தார். அவரை 6 ஆம் நிலை வீரர் ஆர்ஜென்டினாவின் ஜுவான் மார்ட்டின் டெல் போட்ரோ 7:6 (7:5), 6:1 என்ற நேர் செட்டில் வீழ்த்தினார்.

மூட்டு காயத்தால் நடால் 10 மாதங்கள் இடைவெளிக்கு பின்னர் களம் திரும்பியிருந்தார். இதே போல் பெடரர் இரட்டை குழந்தை



கிடைத்த பின்னர் பயிற்சி இல்லாமல் நேரடியாக இந்தப் போட்டியில் பங்கேற்றார். இதனால் இருவரும் போதிய உடல் தகுதியுடன் இருந்தனரா? என்று கேள்வி எழுந்துள்ளது.







வவுனியாவில் பெய்துவரும் கடும் மழை காரணமாக வெள்ளக் காடாகக் காட்சிதரும் மெனிக்பாம் நலன்புரி முகாமை படங்களில் காணலாம்.



"கொடிய வினை தீர்த்திடும் முருகா
எம்குற்றங்கள் போக்கிடுவாய்
வறிய மக்கள் வாடி வதங்காமல்
வரம் தருவாய்."

ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன்
22 கரட்டில் பெற்றிட நாடுங்கள்.

ஆசைப்பிள்ளை அன் சன்
நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம்,
சங்கானை.


# எச்சந்தர்ப்பத்திலும் கூட்டமைப்பு...

மற்றும் தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வுத்திட்டத்தை முன் வைத்தல் ஆகிய மூன்று அம்சங்கள் குறித்து பேசுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்துள்ளது.இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். இத் தகவலை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது; வன்னி மோதல்களினால் இடம்பெயர்ந்து தற்போது நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை பருவ மழைக்கு முன்னர் மீள் குடியேற்றுவது வடக்கு கிழக்கில் யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் இராணுவத்தை மீளப்பெற்றுக் கொள்ளல் மற்றும் தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகார முறைய நிரந்தரத்தீர்வை வழங்குவது குறித்து பேசுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவுள்ளது. இதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்படி மூன்று விடயங்களை நிபந்தனையாக முன்வைத்து அரசுக்கு ஆதரவு தெரிவிக்குமென வெளியான செய்தி தவறானது.எந்த சந்தர்ப்பத்திலும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அடிபணிந்து அரசுக்கு ஆதரவு வழங்காது. தமிழ்மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காகவே போராடும் என்றார். (ச-5)




கலியுக வரதா
எம் கர்மவினை தீர்த்து
எம்மை நல்வழிப்படுத்திடுவாய்
நல்லையம்பதி முருகா

அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக்
கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்

ஆசைப்பிள்ளை அன் சன்
நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம்,
சங்கானை.


# துணை மேயர் பதவியை தமக்கு வழங்க...

நடைபெற்று முடிந்த யாழ்ப்பாணம் மா நகர நசபைக்கான தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது. அந்த சபைக்கான மேயர் மற்றும் துணை மேயர் பதவிக்கானவர்களின் பெயர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட் டுள்ளார். இந் நிலையில் துணை மேயர் பதவி தமது கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் மற்றொரு கட் சியான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது.

இது குறித்து அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் அமீர் அலி கூறியுள்ளதாவது;

துணைமேயர் பதவியை அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் சட்டத்தரணி ரமீஸுக்கு வழங்க எங்களுடைய கட்சியின் சார்பிலே, அரசாங்கத்தின் சார்பிலே வேண்டு கோள் விடுக்கின்றோம். உண்மையிலே இந்த விடயத்திலே அமைச்சர்டக்ளஸ்தேவானந்தாவிட்டுக்கொடுப்போடு நடந்து கொள்வார் என்ற நம்பிக்கை எங்களிடம் இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து புலம் பெயர்ந்து வந்த முஸ்லிம்கள் கணிசமான வாக்கினை அளித்ததன் காரணமாக யாழ்ப்பாண மாநகர சபை யை பொதுஜன ஐக்கிய முன்னணி கைப்பற்றக்கூடிய நிலைக்கு வந்ததை எல்லோரும் மறந்து விடக் கூடாது.

இன ஐக்கியத்தை உறுதிப்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற தமிழ் சகோதரர்களுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இருக்கின்றது என நான் நினைக்கின்றேன்.அந்த வகையில் துணை மேயரை முஸ் லிம் சமூகத்திற்கு விட்டுக் கொடுப்புச் செய்ய வேண்டும் என்பதுதான் எங்களுடைய கௌரவமான எதிர்பார்ப்பாகும் என்றார்.

விவாதத்திற்குரிய விடயமாக நான் இதை எடுத்துக் கொள்ளவில்லை. இந்த விடயம் துல்லியமாக தெரிந்து போன விடயம்.அந்தப் பிரதேசத்திலே கேட்டதிலே நாங்கள் நிறுத்தியிருந்த நான்கு வேட்பாளர்களையும் வெற்றியடையச் செய்திருக்கின்றோம். அது மாத்திரம் அல்லாமல் ஒரு சமூகம் சார்ந்த வேட்பாளர்களாக வெற்றியடைந்திருக்கிறார்கள்.

இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனும் நான் ஆரம்பத்திலே தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த விடயத்தை கவனத்திற்கு அனுப்பி வைத்திருக்கின்றோம். அதைத் தவிரவும் கட்சியின் செயலாளர் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவிடமும் இந்த 'விடயத்தை அனுப்பி வைத்திருக்கின்றோம். இந்த நாட்டின் ஜனாதிபதி அவர்களுக்கும் இந்தச் செய்தி சொல்லப்பட்டிருக்கின்றது.

எனவே எங்களுடைய எதிர்பார்ப்பு என்னவென்று சொன்னால் இது தேசிய மட்டத்தில் பெரிதுபடுத்திய விடயமாகப் பார்த்துக் கொள்ளாமல், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இரு சமூகங்களுக்கிடையிலும் நாட்டில் இருக்கின்ற இரு சிறுபான்மைச் சமூகத்திற்கிடையிலும் பிளவுகளை ஏற்படுத்திக் கொள்ளாத ஒரு நிலைமையை உறுதிப்படுத்தித் தருவார் என்ற வளமான நம்பிக்கை எம்மிடம் இருக்கின்றது. நிச்சயமான அதைத் தவிர்க்க என்பதற்காகத்தான் முரண்பாடுகளுள் உடன்பாடு காணவேண்டும் என்று நாங்கள் எதிர் பார்க்கின் றோம் என்றார். (ச-3)

# பழனி ஆண்டவருக்கு இன்று மகா அபிசேகம்

(நல்லூர்)

நல்லூர் கந்தனின் ஆலயத்தில் அமைந்துள்ள பழனி ஆண்டவருக்கு இன்று காலை திவ்விய மகா அபிசேகம் இடம்பெறும்.

இன்று காலை 6.45 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து மாம்பழத்திருவிழாவும் அதனைத் தொடர்ந்து காலை பழனி ஆண்டவருக்கு திவ்விய மகா அபிஷேகமும்இடம்பெறும். (ந)

# தமிழக மீனவர்கள் மீது...

மீனவர் சங்கத்தின் தலைவர் போஸ் குற்றம் சாட்டியுள்ளார். நேற்று முன்தினம் சனிக்கிழமை மீன் பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டதாகவும் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மண்ட பத்திலிருந்து சென்ற படகை தடுத்து நிறுத்தி மீனவர்களை அடித்து, நிர்வாணப்படுத்தி மண்டபம் வரைக்கும் விரட்டியிருக்கிறார்கள் .எங்களுக்கு துளியளவு கூட மீன்பிடிக்கக் கூடிய நம்பிக்கையோ உறுதியோ இல்லாத சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். பல இலட்சம் மீனவ குடும்பங்கள் இதனால் அழிந்து போகக் கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது என அவர் கவலை வெளியிட்டார்.

1983 க்கு முன்னர் பாஸ்போட்;விசா இல்லாமல் இலங்கையில் எந்தப் பகுதியிலும் இறங்குவோம். எங்களுக்கு அங்கிருக்கிற சிங்கள மீனவர்களாக இருந்தாலும் சரி, தமிழ்மீனவர்களாக இருந்தாலும், இராணுவமாக இருந்தாலும் சரி,காவல் துறையாக இருந்தாலும் சரி எல்லாருமே எங்களது படகுகளைப் பழுது நீக்கி, சாப்பாடு கொடுத்து எங்களுக்கு துணி கொடுத்து எங்களை அனுப்பி வைச்ச காலம் ஒரு நாள் இருந்திச்சு.அதே மாதிரி இங்கே வந்து இறங்கி இராமேஸ்வரத்தில் தங்கிய மீனவர்களையும் பழுது நீக்கி உதவிகளை வழங்கியிருக்கிறோம்.

அதே மாதிரியான சூழ்நிலை திரும்பக்கிடைக்குமென்று போருக்குப் பின்னாடி அரசாங்கம் முயற்சி பண்ணிக் குடுப்பாங்கண்ணு எதிர்பார்த்தோம். ஆனால் பெருத்த ஏமாற்றமாகிப் போய் செத்துப்போய்க்கிடக்கிற மாதிரி எங்கட நிலை உருவாகியிருக்கிறது.அடிப்பது துன்புறுத்துவது என்பது கொஞ்சம் கூட மனிதாபிமான மற்ற செயல் என்றார் அவர். (ச-3)

# விபத்தில்...

நீர்வேலி கந்தசாமி ஆலய பின் வீதியூடாக பருத்தித்துறை வீதியை கடக்க முற்பட்ட வேளை யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி வேகமாக சென்ற மினிவான் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் படுகாயம் அடைந்து இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்நிலையல் சிவபுனிதம் என்பவர் நேற்று முன்தினம்நள்ளிரவிலும், அவரது சகோதரனான செல்வமூர்த்தி நேற்று மதியம் மரணமானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)


மானிப்பாயில்

POWER GYM

BODY CARE & FITNESS CENTRE

ஆரம்பிக்கப்படுகின்றது



17.08.2009 அன்று காலை 7.00 மணிக்கு
N.J. Lawrence (HNB Manager - Manipay Branch)
அவர்களால் திறந்து வைக்கப்படுகின்றது.

உடுவில் வீதி, மானிப்பாய் (GREEN HOSPITAL) அருகில்


# மரண அறிவித்தல்



## சுப்பையா வைத்திலிங்கம்

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா வைத்திலிங்கம் 13.08. 2009 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா சரஸ்வதி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் கதிர்காமத்தம்பி, சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் கதிர்காமநாயகியின் அன்புக் கணவரும் காலம் சென்ற தங்கச்சி யம்மா மற்றும் இராசம்மா, சீனியம்மா, நாகம்மா, பத்மாதேவி, பொன்னம்பலம், தர்மலிங்கம், குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஏரம்பமூர்த்தி, சண்முகராஜா(சிவசக்தி-வவுனியா), காலம் சென்ற சிவானந்தன் (கோபுரம் அரிசி ஆலை-வவுனியா) மற்றும் கருணைத் தவசோதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும்,


செல்வமலர், ஜெயக்குமரன் (நோர்வே), ஜெயகலா (கனடா), ஸ்ரீகலைவாணி (திருகோணமலை), தனகேசவன்(லண்டன்), பிரசாந்தி(ஆசிரியை, யாழ்ற்றன் கல்லூரி) ஆகி யோரின் அன்புத் தந்தையும் சிவகுமாரன் (கணேசன் சென்ரர்), நந்தினி (நோர்வே), அமரர் யோகதாஸ் (கனடா) மற்றும் கணேசகுமார்(இலங்கை துறைமுக அதிகார சபை, திருகோணமலை), பிரதீபா(லண்டன்), சுரபாஸ்கரன் (ஆசிரியர், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜா, சிவகாசிக்கா, யதுஷன், ஜனகன், ஜக துக்ஷா, தீர்ப்தன், சாருகேசி, ஆரங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கணேசன் சென்ரர்,
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.

(3257)

தகவல்
மருமகன் து.சிவகுமாரன்

# மரண அறிவித்தல்



## சின்னப்பொடியன் ஆச்சரியம்

(முகாமையாளர் - விஜிதா கொன்ஸ்ரக்சன்ஸ்)

சுழிபுரம் மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடியன் ஆச்சரியம் 16.08.2009 ஞாயிற்றுக்கிழ மை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடியன்-நன்னி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து-சின்னப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகனும் அன்னலெட்சுமியின் பாசமிகு கணவரும் குகவேணி, விஜிதா (இறுதியாண்டு மாணவி-2007, தேசிய கல்வியியல் கல்லூரி, வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பேபி, சரோஜா, பார்வதி, பூரணம் மற்றும் உருக்குமணி, சத்தியபாமா, வாகையான் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான வடிவேலு, வள்ளியம்மை, கனகம்மா, சிவபாக்கியம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சின்னத் துரை, மார்க்கண்டு மற்றும் நடேசு ஆகியோரின் பாசமிகு மைத்துன ரும் மாணிக்கம், ராசதுரை ஆகியோரின் சகலனும் சுபாஜினி, பிரபா ஜினி, றஞ்சனி (கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்) சுபரூபன் (கலைப் பீடம் கிழக்கு பல்கலைக்கழகம்), பிரதீபன் ஆகியோரின் பெரி யதந்தையும் சுவேஸ்வரன் ,துலகேஸ்வரி ஆகியோரின் சிறிய தந்தையாரும் யோகசாளன், மதுசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (17.08.2009) காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிப்ரம் மத்தி,
சுழிபுரம்.
T.P.:- 0602008626

தகவல்
குடும்பத்தினர்.

(3254)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.